KUDI ARASU.

குடி அரசு

அஞ்சல் சந்தா ...	...	ரூ 3—0
6 மாத சந்தா	...	ரூ 1-12
அயல்நாட்டிற்கு	...	ரூ 4—0

வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ ஞு ஐப்பசி மீ 26உ. (11—11—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 29.

நிமிஷக்கணக்கில் குணம் அடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய். ஆச்சரியநிவர்த்தி!!

ஸ்வாசகாச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர்.

நீண்டகால சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு, தொண்டை இவைகளில் உண்டாகும் சகலவித கஷ்டங்களையும் நமது ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன், இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சுவிடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசிதீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 42 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0. உள்நாட்டுக்கு தபால் செலவு 0—4—0.

புரோப்ரைட்டர் - திருநாவுக்கரசு வைத்தியசாலை,
செவ்வாய்ப்பேட்டை, சேலம். (தென் இந்தியா.)

Use Only Unbreakable
Wrought Iron Railings Notee For.

100 வருஷத்துக்கு உத்திரவாதம்-

நம்நாட்டு கைத்தொழில் ஆதரியுங்கள்.

இரும்பு கிராதிகள் விலை சரசம்.

பால்கனி கட்டிடங்களுக்கு அவசியமான இரும்பு கிராதிகள் அநேக தினுசுகளில் விற்பனைக்கு தயார்செய்து யிருக்கிறோம். இந்த புது தினுசு கிராதிகள் நாகரீகமானதும் கட்டிடங்களுக்கு பார்வை கொடுக்கக்கூடியதும், எந்த விதத்திலும் உடையாமலும் தயார்செய்த வானமாக விற்பனைசெய்துவருகிறோம். கட்டிடங்களுக்கு எற்றவாறு எந்த அளவுப்படியும் குறித்த காலத்தில் தயார்செய்து கொடுக்கப்படும். உடனே தங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய கிராதிகளுக்கு ஆர்டர் செய்யவும்- பிரைஸ் லிஸ்ட் இனாம-

தயார் செய்பவர்கள்:—

ஸ்ரீ கிருஷ்ண இரும்பு தொழிற்சாலை,
மதுரை.

போட்டோ ஆல்பம்.



நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர்வற்ற ரூபலாவண்யமும் பலவித்தியாச சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ண் ஏஜன்ஸி, தபால் பெட்டி 119 மதராஸ்.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை

இனாம்! இனாம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

ஜினான் வாட்சு கம்பெனி,
பிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

முன் விலை ரூ. 14, இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்

மேற்கண்டபடி எந்த வேஷப்வேண்டுமோ அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உயர்ந்தது. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஞு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு கேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்,
இஞ்சினியரிங் ஒர்க்ஸ்.

மைலாப்பூர், மதராஸ்

'திராவிடன்'

திணப்பதிப்பு சந்தா விபரம்.

மாதமொன்றுக்கு	ரூ. 1—6—0
சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு	„ 1—0—0
தனிப்பிரதி	0—0—6
மலாய் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு	„18—0—0

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.

பிளாக்குகள்.

புத்தகங்களுக்கும், விளம்பரங்களுக்கு, லேபில்களுக்கும், இன்னும்இதர அச்சுவேலைகளுக்கும் வேண்டிய சகலவிதமான

லைன், ஆப்டோன்,
கலர்பிளாக்குகள்

35 வருஷ அனுபோகஸ்தரால் தயாரிக்கபடுவது

உயர்ந்த வேலைப்பாடு,
திருப்திக்கு உத்தரவாதம்.

கொஞ்சகாலத்திற்கு சார்ஜுகள் வெகுவாய் குறைக்கப்பட்டிருக்கின்றன. கேட்லாக் இனாம்.

ஜான் பிரான்கீஸ், சொந்தக்காரர்
பாஸ்டியன் ஸ்டுடியோ
173. போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை

எங்கள் விசேஷகுறைந்த விலை விற்பனை

டேபில் டைம்பீஸ் இனாம்!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக் கெடியாரம் வாங்குகிறவர்களுக்குமேஜையின் பேரில்வைக்கக் கூடிய ஒரு அழகான டேபின் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம், முந்துங்கள். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்.

ஜினோன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ்போஸ்டு, மதராஸ்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள்- 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0.நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்னர்சரி தோட்டம், சேலம்.

தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

'ஆனந்தகுணபோதினி"

ஆடியாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற மூதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை பொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜனவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆனந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேருபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எங்குமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ, 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

திருப்தி யில்லாவிடில் பணம் வாபீஸ்.

நூதனமாகக் கண்டுபிடித்துத் தயாரித்துவரும்

கை தையல் மிஷின்.

இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த நூதன மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் பணம் சம்பாதிக்க முடியும். இதனால் கை குட்டைகள், ஜாக்கெட்டுகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணிகளிலும் மல்துணிகளிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் செய்யலாம், நவராத்திரிக்காகப் பெரிய பொம்மைகளுக்கு நன்கு அலங்காரம் செய்ய உதவும்.

உறுதியான மேஷின் ஐம்பதுவருஷமானாலும் கெடாது,

விலை ரூபாய் 4—15—0 தபால் செலவு இனாம்.

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி.
தபால் பெட்டி 119, மதராஸ்.

திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரி.

இந்தியாவிலே குறைந்த விலையுள்ள பனியன்கள் எங்களிடம்தான் கிடைக்கும். விலை 32 இஞ்சு கார்டிகன் டஜன் 1-க்கு ரூபா 3—8—0 தான்.
இன்னும் பலவிதமான பனியன் தினுசுகளும் கிடைக்கும்.
விலாசிபா ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.
எல்லா இடங்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

பண்டிதர்க்குப் பகை அவர்கள் படிப்பேயன்றி "குடி அரசு" அல்ல.

கைவல்யசாமியார் எழுதுவது.

எழுத்துத்தெரிந்து, இலக்கிய இலக்கணம் படித்து, சமயநூல் பார்த்த பண்டிதர்களானோர் பலர் இருக்கிறார்கள். இவர்கள் படித்த சாஸ்திரத்தின் உண்மையுணராதுபலர் 'குடி அரசை' தொடப்படாதென்றும் படிக்கக்கூடாதென்றும் நினைக்கிறார்கள். தங்கள் மாணாக்கர்கள் படிக்கக்கூடாதென்றும் போதிக்கிறார்கள்- ஆனால் மாணாக்கர்கள் அந்தப்பண்டிதர்களின் குறுகியபுத்தி விவேகவெளிச்சமடையவில்லை என்று நினைத்து அவர்களுக்குத் தெரிந்தும் தெரியாமலும் "குடி அரசை" படிக்கிறார்கள் இலக்கிய இலக்கணமும் பதச்சேர்க்கையும் வாசக ஒழுங்கும் "குடி அரசி"னால் பண்டிதர்களுக்கு வேண்டுவதில்லையென்பது சரியே.

பண்டிதர்களாகிய நீங்கள் சம்பாதிக்கும் அறிவினால் நமது வாழ்க்கை செழிப்படையவில்லை. எப்போதும் உங்கள் மதிக்குப்புறத்தே உண்மை தள்ளப் படுவதால் நம் அறிவு முதிர்ச்சியுடன்தொடர்ந்துவளர இடமில்லாமல்போயிற்று. ஏனெனில் நெடுங்காலமாகவே நாம் ஆசார அனுஷ்டானங்களில் பூர்வ முன்மாதிரியைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி நடப்பதில் வழக்கப்பட்டுத் தேறியிருக்கிறோம். நாம் ஆராதனைசெய்து வரும்புராதன மாதிரிகளைத்தவிர வேறுமாதிரிகள் உண்டாக்கமுடியுமென்ற எண்ணமேநமக்குதிப்பதுகிடையாது. பசித்திருக்கும் நாட்டில் உயிர்தரும் கொள்கைகளைப் பரவச்செய்யவேண்டுமே யல்லாமல் குப்பை கூளங்களைக் கிண்டிக்கிளறிக் கூட்டிக்குறைத்துத் தட்டிக்கொட்டி உண்டாக்கித் தள்ளி எடெழுதியும் மொழிபெயர்த்தும் பரிதாபத்திற்கிடமான சமய வாதப்பத்திரிகைகளில் கோழை குப்பைகளை எழுதுவதும் நாட்டிற்கு என்னநன்மையை உண்டாக்கியிருக்கிறது?

வறுமை தமோ குணப்பயன். அறுமிகத்தாழ்ந்தது என்றுசொல்ல நீங்கள் கேட்டால், "செல்வத்தின் இன்பங்களை காட்டிலும் டம்பமில்லாத தாழ்மை அதிகவிலையுடையது. அது சத்துவகுணப்பயன்- திருவள்ளுவரை விடவா ஞானிகளிருந்தார்கள்" என்றுசொல்லிவிடுவீர்கள்- ஆனால் உங்களுக்கு தீபாவளித் தொந்தரவுதான் இனியும் தீரவில்லை.

நாகரீகஉலகத்தில் பெரும் பான்மையான வஸ்துக்கள் உண்ணல், களித்தல், கல்வி, பயிற்சி அரசு, ஸ்யாஜ்யம், முதலியன இவைதத்தமக்குரிய எல்லையைமீறி அதிகஎல்லையை வியாபித்து நிற்கின்றன. இவற்றில் உண்டாகும் சுமையில் பெரும்பகுதி அஞ்ஞசியம்என்றும் இதைச்சுமப்பதில்மனிதன்தனது பெரியபலத்தை காட்டுகிறானேஒழிய புத்திக்கூர்மையைக்காட்டவில்லை. இவை ஆத்மலாபத்திற்கு பலனளிக்காது என்றும் பண்டிதர்கள் சொல்லுவதுண்டு ஒருவன் குளத்தில் அதிக ஆழத்திலிறங்கி நீச்சுத்தெரியாமல் தத்தளிக்கையில் அவன் குளம் முழுவதையும் தன் வீணான வலிய முயற்சிகளால் குழப்பிக்கொண்டு, அங்ஙனம் குழப்புவதால் ஏதேனும் லாபம் கிடைக்குமென்ற மூடநம்பிக்கை கொள்வதுபோல மேற்கண்ட உலக அவஸ்தையிலிருக்கிறவர்கள் குளத்தைகுழப்புவன்போல கடவுள் பக்தர்களுக்குத் தோன்றுவதாகச் சொல்லுகிறார்கள். ஆனதால் கடவுள் கைங்கிரியமும் சாஸ்திர விசாரணையும் ஏழ்மைத்தன்மையும் போதுமென்று சொல்லும் பண்டிதர்களுமிருக்கிறார்கள். இவர்கள் பக்தியும் ஞானமும்இவர்களோடிருக்கட்டும். மற்றசமூகங்களுக்குக்கடவுள்உரிமை இல்லையென்றுசொல்ல இவர்களுக்கு என்ன நியாயமிருக்கிறது இவர்கள் படித்தவட்டை விலாசபுத்தியோடு இன்னொருதரம் திருப்பிப்படிக்கவே "குடி அரசு" இவர்களை வற்புறுத்துகிறது.

இப்பண்டிதர்களில் ஒரு கூட்டத்தார் சிவபுராணம் சிலபடித்து, திருவிளையாடல் கந்தபுராணத்தையும் தெரிந்து பெரியபுராணத்தில் லயித்துப் போவார்கள். இவர்கள் சைவத்தில் பற்றுதலதிகமுடையவர்கள். இன்னொரு பிரிவு சிலபுராணம் படித்து, பாகவதம் பாரதங்களைத் தெரிந்து, ராமாயணத்தில் லயித்துவிடுவார்கள். இவர்கள் வைஷ்ணவத்தில் அதிகம் பற்றுடையவர்கள். இவர்களுக்குஎவ்வளவு சித்தாந்த நூல்களிருந்தாலும் மேற்கண்ட புராணங்களே அவை கோர்த்துக் கொண்டிருப்பதினால் அந்த புராணங்களே மோக்ஷவழியை காட்டினதென்று நினைத்துக்கொண்டிருப்பார்கள் இதில் யார் பெரியவர்கள், யாருடையது மோக்ஷவழிக்குப்பக்கம் என்று இவர்கள் போட்ட சண்டையால் அநேக தூஷணை நூல்களும் ஆபாசமான கதைகளும் ஏற்பட்டிருக்கின்றன. பின்னால்வந்த பண்டிதர்களுக்கு சண்டையை இன்னும் ஆபாசமாய்ப்போட பிரமாணநூல்களாகவுமிருக்கின்றன. இவர்கள் இரண்டுபேருக்கும் நடுவில் வேதாந்திகளென்று ஒருபண்டிதக்கூட்டமுண்டு. இவர்கள்மற்றஇருவருக்கும் மத்தியஸ்தர்கள். இவர்கள் பாட்டையோ அவர்கள் சுலோகத்தையோ அவரவர்களுக்குத் தகுந்தபடி அருத்தம் சொல்லி, "அதுவும்சரி, இதுவும்சரி, சூட்சுமத்தில் அப்படியே, ஸ்தூலத்தில் இப்படியே" என்று சொல்லி எல்லாரும் திருப்திபட்டு சந்தோஷமடைந்து பெரியவர்களை ஸ்துதிப்பார்கள். அந்த இடத்தைவிட்டு பிரிந்தால் போதும், அவரவர்கள் முன்பற்றுதலே பிரதானமென்று சண்டையும் போடுவார்கள், ஜனத்தையும் துன்புறுத்துவார்கள்.

ஆராய்ச்சிக்காரர்களென்றும், தர்க்கீகர்களென்றும் சிலபண்டிதர்களுண்டு. இவர்கள் ஆராய்ச்சியும் தர்க்கமும் பாஷையிலும் சமயக் கொள்கைகளின் கதைகளிலும் "அதற்குஇது பிரமாணம் இதற்கு அது பிரமாணம்" என்றுகாட்டி வல்லான் வகுத்த நஞ்சுப்பொய்கையில் மூழ்கிக் கிடப்பார்கள். தாழ்ந்தவகுப்பென்று ஏற்பட்டவர்களுக்கும் இவர்கள் கடவுளுக்கும் சம்பந்தமில்லை என்றே இவர்கள் ஆராய்ச்சி சொல்லிவிட்டதாம். இதற்கு மேற்பட்டதாக நினைத்துக்கொண்டிருக்கும் மதக்கண்டன சாஸ்திரவாதிப் பண்டிதர்களுண்டு. "வேதம் யாவருக்கும் அபரமெனவும் சிவாகமம் பரமென்பதோடு அபரம், பரத்தின் ஐக்கிய பத்தியத்தாலன்றி உண்மைபொருள் விளங்காதென்பது தீர்மானம்" என்று சைவ சித்தாந்திகள் வேதமதத்தை சைவ மாயாவாதிகளென்றும் பிரசன்ன பௌத்தர்களென்றும் கண்டிப்பார்கள். அவர்களும் சங்கரர் பாஷியங்களை எடுத்துக்கொண்டு இவர்கள் சொன்னதையே திருப்பித்திருப்பி மறுத்துக் கண்டிப்பார். அன்னம் சுருங்கினால் ஐந்தும் சுருங்குமென்பதுபோல இந்தக்காலத்தில் பெரியசண்டைகளைக்காணோம். சோமசுந்தர நாயகர், சீனிவாச தீக்ஷதர் சத்யோஜாத சிவாச்சாரிகள் போட்ட சண்டையிலும் சில புஸ்தகங்கள் எழுதப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு காணப்படும் இன்னும் ஒருவிதமான பண்டிதர்கள் பழய புஸ்தகங்களுக்கு உரை எழுதுகிறவர்களாகவும் மொழிபெயர்ப்பவர்களாகவுமிருப்பார்கள். பழயநூல்கர்த்தாக்களையெல்லாம் சமயம்கிடைக்கையில்பாப்பான்என்றோ அல்லதுபாப்பான் வீட்டில் வளர்ந்தவனென்றோ எழுதிவைத்துவிடுவதே அவர்வர்கள் முதல்வேலை. இன்னும்பலவிதமானவர்களுமுண்டு, இவர்களுடைய தர்க்கங்களும் கடவுள் பக்திகளும் எழுதின புஸ்தகங்களும் மோக்ஷம் கொடுக்காதென்று நாங்கள் சொல்லவரவில்லை. அதில் சிறிதுகோத்தை எடுத்து ஒரு பப்பிரமெண்டுசெய்யப் புஸ்தகமெழுதியிருந்தால் இவர்கள் பிள்ளைகள் ஆசார தோஷமில்லாமல் பப்பிரமெண்டு தின்னலாமே. தங்கள் பிள்ளைகள் பப்பிரமெண்டு கேட்கையில் ஆசாரதோஷம் வந்துவிடுமென்று அதை அடிக்கவேண்டாமே- அடித்தாலும் அந்தப்பிள்ளை பக்கத்துவீட்டுப்பிள்ளை பப்ரமெண்டு தின்பதைப்பார்த்து பெருமூச்சு விடுவதால் பக்கத்துவீட்டுப்பிள்ளைக்கு வயிறு உப்புவானேன்? இந்த துன்பமெல்லாம் ஒழிய நம் கடவுளும் சாஸ்திரங்களும் பக்தியும் பிரயோஜனப்படாவிட்டால் இவையனைத்து மிருந்து என்னபிரயோஜமென்று "குடி அரசு" கேட்டால் அதைக் கோபிப்பது நியாயமா?

வியாபாரம் பிரதானமென்றும், யோக்கியதை கேவலம் ஒருவித தந்திரமென்றும் கொண்டு பொய்யும் புளுகுமாக வியாபார விளம்பரங்களை கோர்ப்புறங்களில் எழுதி ஒட்டிக்கொடுத்தது போதாதென்று உழவர் யோக்யமாக உழைக்கும் பச்சை வயற்புறங்களிலும் உதயத்தில் தெரிக்க ஒளி முதலாவதுபடும் மலைச் சிகரங்களிலும் ஒட்டத்தலைப்பட்டு வர்த்தகமென்றும், அரசென்றும், தேசபக்திஎன்றும், பெயர் புனைந்து கடித்து வயிறுவளர்ப்பதுபோலப் பண்டிதர்களும், சமயத்தின் உண்மையான சத்தியத்தை விட்டுவிட்டு வெளிவேஷத்திற்கும் வித்தையின் பெருமையைக் காட்டவும் தன்லாபத்திற்கும்ஆசைப்பட்டு மூடக்கொள்கையான சமயப் புரட்டுகளைப்பரப்பவும் தலைவிகளாக இருந்தார்கள். இந்தப் பண்டிதர்களில் சமர்த்தர்களுக்கு வேதத் துய்சகோளரி, சைவமத கண்டனசண்டமாருதம், மாயாவாத கண்டன கேசரி என்கிற பலவித பட்டப் பெயருமுண்டு.

வேதம் உயர்ந்ததா? ஆகமம் உயர்ந்ததா? இரண்டும் ஒன்றா? எதிலிருந்து எது வந்தது? எதை எது போர்த்துக்கொண்டிருக்கிறது என்று பார்ப்பார்களே போட்ட சண்டையில் எல்லாப் பாப்பார்களும் அவர்கள் இடத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டது மன்னியில் எவ்வளவு பெரிய பண்டிதர்களாக விருந்தாலும் மற்றவர்களெல்லாம் ஒழுக்கம் ஆச்சாரம் இல்லாத அடிமைகள் என்று இவர்கள் நெற்றியில் கட்டியிருக்கும் சூத்திரன் என்னும் பேரையும் நிலை நாட்டியும் வைத்திருக்கிறார்கள். அங்கல்லோ பண்டித திறமை போவேண்டும்- பெரிய புராணத்திலும் தேவாரபதிகத்திலுமே அநேக சைவப் பண்டிதர்கள் கலைத்துப்போனார்கள். சிவஞான முனிவர் வேதத்தை விளக்கி ஆகமத்தைப் புதிப்பித்தார் என்பதுமட்டும் தெரியும்- அதிலுள்ள அநேக கருத்துத்தெரியாது- நீலகண்டர், சங்கரர், ராமானுஜர், மத்வர், முதலிய நால்வர்களும் செய்த வியாச சூத்திரபாஷியத்தை அபரவித்தை என்று சைவர் குற்றம் சொன்னாலும் சங்கரர் பாஷியம் தவிர மற்றவர்கள் பாஷியத்தில் பரவித்தை கலந்திருப்பதாகச் சொல்லி ஒத்துக்கொள்ளுகிறார்கள். சங்கரரும் அவர்கூட்டமும் தன்னப்பட்டாலும் எல்லாம் எங்களுக்கும் சொந்தமென்று பார்ப்பார்களுடைய காரியத்திற்கும் அவர்கள் லாபத்திற்கும் ஒன்றாய்ச் சேர்த்துக்கொள்ளுவார்கள். இதற்கு நேற்று நடந்த ஒரு பூசையை உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன்.

அம்மனுய்க்கனூரில் சங்கராச்சாரி சிறு பெண்களை பூசித்து சரஸ்வதி பூசை செய்தார் சந்நியாசி இந்த பூசை செய்ய என்ன நியாயமென்று ஒருவன் கேட்டானும். அங்கிருந்த இரண்டு சாஸ்திரிகள் பாகவதத்திலும், தேவி பாகவதத்திலும் இதற்குப் பிரமாண முண்டென்று சொன்னார்களாம். சுவாமிகள் முதல் எல்லோரும் சந்தோஷப்பட்டார்களாம். இதை "சுதேசமித்திரனில்" படித்திருப்

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

இந்து மதக் கொடுமையும் விதவைகளின் துயரமும்.

அன்பார்ந்த சகோதரி, சகோதரர்களே;

இவ்விருபதாம் நூற்றாண்டில் பிறநாடுகளும், பிறசமூகங்களும் முற்போக்கடைந்து வருவதைப் பார்த்து நாமும், நம் நாடும் முன்னேற்ற மடைய வேண்டுமென்ற ஆர்வத்தினால் அதற்கெனப் பல கழகங்களைக் கண்டு பற்பல துறையிலீடுபட்டு தொண்டாற்றி வரும் பொழுது நம் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ளவற்றுள் விதவா விவாக மறுப்பு முதன்மையானதென்பதை மறுக்க முடியாது. விதவைகளுக்கு நம் மதத்தின் பெயரால் நாமிழைக்கும் அநீதியை அளவிட முடியாது. இந்து சமூக ஆண்கள் மட்டில் தங்கள் மனைவிகள் இறந்த பின்னரும் மனைவிகளிருக்கும் போதும் எவ்வளவு வயதானவர்களாயிருப்பினும் தம் தம் விருப்பப்படி எத்தனை கல்யாணமாயினும் செய்து கொள்ளுகிறார்கள். ஆனால் 12-மாத (ஒரு ஆண்டு) வயதுடையபெண் தனக்கு கல்யாணம் செய்து வைக்கப்பட்ட கணவன் ஆறு மாதத்திலோ ஒன்றிரண்டு வருஷத்திலோ இறந்து விட்டால் அப்பெண்ணானது விதவையாய் ஐம்புலனையும் அடக்கிக் கொண்டு தன் வாழ்நாளைக் கழிக்க வேண்டுவதுடன், அற்ப இன்பமாகிய புஷ்பம், மஞ்சள், வளையல்களையும் அணிந்தால் நம் குலமும், நாமும் நிர்மூலமாய்ப் போய்விடுவோமென்று கருதுகிறோம். பன்னிரண்டு மாத பாலமணமாறாத பச்சிளங்குழவியின் கெதியே இது வென்றால் 12, 14, 16 வயதுள்ள சிறுமிகளின் கெதியையும் விவரிக்க வேண்டுமோ! அந்தோ பாழும் இந்து சமூகமே! இக்கொடுமைகளை மிஸ் மேயோ எழுதி விட்டதற்கு கூப்பாடுபோடும் குலாபிமானிகளுக்கும், மதப்பெருமை மாணிக்கங்களுக்கும் குறைவில்லை! ஆனால் இக்குறைகளை நீக்க முன்வரும் ஆண்மையாளரைக் காண்பதற்கில்லை.

1921 ம் ஆண்டின் அரசாங்கத்து சென்ஸஸ் கணக்குப்படி நம்மிந்திய நாட்டில் மொத்தத்தில் 3,73,23,833 (ஏறக்குறைய நான்கு கோடி) அதில் 12 மாத வயதிற்குக் கீழ்ப்பட்டு 612 விதவைகளும், 1 முதல் 2 வயதில் 493 விதவைகளும், 2 முதல் 3 வயதில் 1285 விதவைகளும், 3 முதல் 4 வயதில் 2,863 விதவைகளும், 4 முதல் 5 வயதில் 6,853 விதவைகளும், 5 முதல் 10 வயதில் 85580 விதவைகளும், 10 முதல் 15 வயதில் 233,533 விதவைகளுமிருக்கிறார்கள். (ஐந்து வயதிற்குட்பட்டு மொத்தம் 12,916 விதவைகளும், 15 வயதிற்குள்பட்ட 331,793 விதவைகளுமிருக்கிறார்கள்) இக்கணக்குப்படி இந்திய நாட்டில் விவாகமான பெண்களின் தொகையில் 5 வயதிற்குள்பட்ட விதவைகள் 1000 க்கு 14 ஆகவும். 16 வயதிற்குள்பட்ட விதவைகள் 1000 க்கு 111 ஆகவும், 15 வயதிற்குள்பட்ட விதவைகள் 1000 க்கு 437 ஆகவுமிருக்கின்றதெனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. இக்கணக்குகளைப் பார்த்து நம் மனம் பதறுகின்றதெனினும், வைதீகப் பித்தர்கள் ஸ்ரீ சாரதா அவர்களின் இணக்க வயது மசோதாவை தகர்க்கப் பிரயத்தனப்பட்டு வருவதுடன், "பால்ய விவாகமில்லாவிடில் பெண்களின் கற்பு நிலை பெறாது" (Realsexual? morality will be impossible without child-marriage) என, "பார்ப்பனக் குழந்தையும் பார்ப்பனரல்லாத குழந்தையும் உட்கார்ந்து சாப்பிடுவதைக் கண்டால் ஒரு மாதம் பட்டினியிருப்பேன்" எனச் சொல்லிய நமது டில்லி சட்டசபை பிரதிநிதியாகிய ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் சட்ட சபையில் வாதிக்கின்றார். இதனினும் இழிவு வேறொன்றுளதோ?

இவ்வநீதிகளைப் போக்கி நம் சமூகம் முன்னேற்ற மடையவும் விதவைகளின் துயரகற்றவும் ஏதுவான விதவாவிவாகத்தை நடைப்பிக்க முன் வரும் ஒரு சிலரையே இந்நாளில் காண்கின்றோம். அவர்களின் நன் முயற்சியைத் தடை செய்யும் வைதீக கோஷ்டியாருக்கும், அவர்களுக்குத் துணையாகக் கொள்ளும் இந்து மத இதிகாச புராண வேத சாஸ்திரங்களுக்கும், குறைவில்லை. ஒவ்வொரு சமூகமும் அறிவு ஆராய்ச்சிகளினால் முன்னேற்றமடைந்து வரும் இந்நாளில், படித்தோம் எனப் பறைசாற்றித்திரியும் நம் பந்து மித்திரர்கள் இவ்விஷயங்களை அலட்சியம்செய்து வாழ்நாளை வீண் நாளாக்குகின்றார்கள் என்றால் இவர்கள் படித்ததும் படிப்பாகுமா? போனதுபோக இனியேனும் கண்களைத் துடைத்து எழுந்து நின்று, உலகம் விசாலமானதென்பதை உணர்ந்து இறைவனால் நமக்கு சிறப்பாயமைக்கப்பட்டுள்ள பகுத்தறிவைக் கொண்டு நன்கு ஆராய்ந்து, தெளிந்து நம் குறைபாடுகளை யாவருக்கும், சிறப்பாக பெண்மக்களுக்கும் சாங்கோபாங்கமாய் எடுத்துரைத்து விதவா விவாகத்தை நடைமுறையில் நடத்தி வருவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டியது நமது முக்கிய கடமை என்பதை இதனால் ஒவ்வொருவருக்கும் வற்புறுத்துகின்றோம்.

பன்னிரண்டு வயதில் மணம் செய்து வைக்கப்பட்டு மூன்று மாதத்தில் விதவையாகி சிறிது காலத்திற்குப் பின சமூக அநீதியை எதிர்த்து மணம்புரிந்து கொண்ட அமதாபாத் ராவ்பகதூர் கேசவலாலின் புதல்வியான ஸ்ரீமதி யசஸ்வதி பாய், தனது பெற்றோர்களுக்கு எழுதிய கடிதம் நம் நாட்டு இளம் விதவைகளின் துயரையும், நம் சமூக கொடுமையையும் நன்கு அறிவுறுத்துகின்றமையால், "நவசக்தி"யில் வந்துள்ளபடி அக்கடிதத்தை இதன் கீழ் தருகின்றோம்—

என்னுடைய அருமைத் தந்தை தயார்களையும் நான் பிறந்து வளர்ந்த வீட்டையும விட்டுச்செல்லவேண்டியிருப்பதை எண்ணும் போது என் இருதயம் பிளந்து விடும் போல் துக்கம் உண்டாகிறது. இந்தக் கடிதத்தைக் கண்டதும் சற்றும் எதிர்பாராதிருக்கையில் இடி விழுந்தது போல் நீங்கள் போவீர்களென நான் அறிவேன். ஆனால் காதல் தெய்வத்துக்கு என் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டேன். நான் என் செய்வேன்?

உங்கள் பாதத் தாமரைகளை என் கண்ணீரால் அலம்பிய போதிலும் என்னுடைய மறுமணத்திற்கு நீங்கள் இணங்க மாட்டீர்களென எனக்கு நன்றாய்த் தெரியும். ஆகலின் இதனால் எனக்கு எவ்வளவு துன்பம் உண்டாயினும் என் நடத்தையே சரியானதென்று நிச்சயம் பெற்றிருக்கின்றேன். நமது ஜாதிஜனங்கள் உங்களையும் என்னையும் கேவலமாகக் கருதுவார்களென்பதில் சந்தேகமில்லை, அதற்கு நான் என் செய்வது? என்னுடைய பன்னிரண்டாம் வயதில் நீங்கள் தெரிந்தெடுத்த ஒரு கிழவனுக்கு என்னை மணஞ் செய்து கொடுத்தது உண்மையில்லையா? எனக்குக் கலியாணஞ் செய்து வைத்தது நீங்கள் தானே என நம்புகிறீர்களா? மூன்று மாத காலத்திற்குத்தான் நான் அக்கிழவனின் மனைவியாகக் கருதப்பட்டேன்- அப்போதிருந்து கைம்பெண்ணாய்க் காலங்கழித்து வருகிறேன்- நண்பர்களும் பந்துக்களும் நான் விதவையானதற்கு வருந்தினாலும் என் இளமையை அடியோடு மறந்துவிட்டார்கள். உணர்ச்சிகளெல்லாம் அற்றுபோயிருந்த கிழவியாக என்னை எண்ணிக் கொண்டார்கள்- வாழ்க்கை இன்பங்களை விரும்பி துடிதுடித்துக் கொண்டிருக்க இருதயம் எனக்குண்டென்பதை அவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை. என்னுடைய கையில் ஓர் அணு பெருமான வளை அணிந்தாலும் அல்லது தலையில் கொஞ்சம் பூ அணிந்து கொண்டாலும் அவற்றை மற்றவர்கள் பாராமல் மறைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. பன்னிரண்டு வயது பாலையான நான் அவ்வளவு கண்டிப்பான தவவொழுக்கத்தை எப்படி மேற்கொள்ள முடியும்? இவ்வாறு சென்ற 9 ஆண்டுகளாய் என் ஆசாபாசங்கள் உணர்ச்சிகளெல்லாம் என் இருதயத்திலேயே ஒடுங்கிக்கிடந்தன.

எனக்குப் பன்னிரண்டு வயதாயிருந்தபோது என் தலைமையனுக்கு முப்பது வயதாயிருந்தது. தன்மனைவியுடன் பத்தாண்டு காலம் இன்பவாழ்க்கை நடத்தியிருந்தார், நான் கணவனையிழந்தபோதே அவரும் மனைவியையிழந்தார். அவரை மறுமணஞ் செய்து கொள்ளும்படி நீங்கள் வற்புறுத்தினீர்கள்- அதற்கு இணங்கி அவரும் மறுபடி கலியாணம் செய்துகொண்டார்- ஆனால் அப்போது என்னைப்பற்றி நினைத்தவர் யாருமில்லையே!

நான் யார் மீதும் குற்றஞ் சுமத்தவில்லை, நம் சமூக வழக்கமே இதற்கு காரணமாகும். புருஷனுக்கு எவ்வளவு முறை வேண்டுமானாலும் கலியாணம் செய்து கொள்ள இடங் கொடுக்கும் சமூகச்சட்டம் பெண்ணுக்கு அவ்வுரிமையை அடியோடு மறுக்கிறது. ஆஹா! என்ன சமூகம் இது! இக்கொடிய வழக்கத்தைப் புறக்கணித்து வாழ்க்கையின்பம் பெறுவதற்குரிய வழியைக் கடைப்பிடித்தால் அதில் என்ன தவறு? அதில் பாவம் ஏதவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை- இரகசியமாகத் துன்மார்க்கத்தில் வீழ்வதை விடப் பகிரங்கமாக மணஞ்செய்து கொள்வது எவ்வளவோ மேன்மையானதன்றோ? உடலைச் சங்கிலியால் பிணித்துக் கட்டிவிடலாம்- ஆனால் இதயத்தைஎவரும் கட்டமுடியாது.

என்னை அதிகப்பிரசங்கி என்று ஒரு வேளை நீங்கள் கருதலாம், ஆனால் நான் என்செய்வேன்! என்னுடைய நடத்தைக்குக் காரணங்களை என் பெற்றோர்களுக்கு விளக்கிக் கூறவேண்டாமா? என் கணவராக வரித்துக் கொண்டவரைப்பற்றி நீங்கள் என்ன எண்ணினாலும் சரிதான், என் உடலையும் உயிரையும் அவருக்கே அர்ப்பணஞ் செய்து விட்டேன்.

என்னருமைத்தாயே! தந்தையே! என்னை மன்னித்து விடுங்கள். நான் எப்போதும்போல் இனியும் உங்கள் புதல்வியேயாவேன், என்னை நீங்கள் புறக்கணியாவிட்டால் உங்கள் பாதங்களுக்கு பூஜை செய்ய எப்பொழும் காத்துக் கொண்டிருக்கிறேன். உங்கள் தயாளத்தினால் எனக்குபல ஆடையாபரணங்களைத் தந்திருந்தீர்கள்- ஆனால் என் உடலில் இப்போதணிந்திருக்கும் ஆடையையன்றி வேறு எதையும் நான் எடுத்துப் போகவில்லை. அதையும் பின்னால் திருப்பிக் கொடுத்து விடுகிறேன், ஒருக்கால் என்னை நீங்கள் உமது புதல்வியல்லவென்றே தள்ளி விடலாம். பின்னர் உங்களுடைய உடமையை நான் எடுத்துச் செல்லுவது எவ்வாறு நியாயமாகும்? எனக்கு ஆடை ஆபரணங்களில் ஆசையில்லை, உடம்பு முழுதும் நகை போட்டுக் கொண்டு மகிழ்ச்சியில்லாத விதவையாயிருப்பதினும் ஆபரணம ஒன்றுமே இல்லாவிடினும் சந்தோஷமாயுள்ள மனைவியாயிருக்க நான் விரும்புகிறேன்,

என்னுடைய புது வாழ்விற்கு உங்களுடைய ஆசீர்வாதம் எனக்குக் கிடைக்காதா?

உங்கள் நன்றியில்லாப்புதல்வி-

யசஸ்வதி-

இதினின்று நம் சகோதரிகளின் (விதவைகளின்) துர்ப்பாக்கியநிலைமை இன்னதென்பதையும் அவர்களுக்கு நாமிழைக்கும் கொடுமைகளென்னவென்பதையும் திட்டமாய் அறிகின்றோம். கண

(இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.)

பெரிய புராணம்.

மானக்கஞ்சாற நாயனார்

(மெய்கண்டான் எழுதுவது)

கஞ்சாற்றூர் என்னும் ஊரில் வேளாளர் குடியில் பிறந்து, அரசரிடத்தில் சேனாதிபதி உத்தியோகஞ் செய்தவர் மானக்கஞ்சாறர் என்பவர் இவர் சிவனடியார்களிடத்தில் மிகவும் அன்புகொண்டு அவர்கள் விரும்பும் பொருள்களை யெல்லாம் கொடுத்துவந்தார். இவருக்குப் பல ஆண்டுகளாகப் பிள்ளையில்லாமலிருந்து பிறகு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதுவும் பரமசிவனுடைய திருவருளாற் பிறந்ததாம். அந்தப் பெண்ணும் வளர்ந்து மணப்பருவம் அடைந்திருந்தாள்.

அப்போது ஏயர்கோன் கலிக்காம நாயனார் என்பவர் அப்பெண்ணை மணஞ்செய்து கொள்ள விரும்பினார். மானக்கஞ்சாறரும் ஏயர்கோன் கலிக்காமருக்குத் தனது பெண்ணை மணஞ்செய்து கொடுக்கச் சம்மதித்தார்- கலியாணஞ் செய்வதற்கு நாளும் குறிப்பிடப்பட்டு அதற்கு வேண்டிய செயல்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஏயர்கோன் கலிக்காமரும், கலியாணம் செய்துகொள்ளும் பொருட்டுத் தமது சுற்றத்தாருடன் கஞ்சாற்றூருக்குப் புறப்பட்டு வந்துகொண்டிருந்தார்.

கலிக்காமர் கஞ்சாற்றூரை யடைவதன் முன் பரமசிவன் ஒரு மாவிரதி வடிவங்கொண்டு மானக்கஞ்சாற நாயனார் வீட்டிக்கு வந்தார். நாயனாரும் அவரை வரவேற்று வணங்கினார். மாவிரதி நாயனாரைப் பார்த்து "இவ்வீட்டில் என்ன சுபகாரியம் நடக்கப் போகிறது" என்று கேட்டார்- நாயனார் தமது மகளுக்கு மணம் நடக்கப்போகுஞ் செய்தியைத் தெரிவித்தவுடன் உள்ளே போய் தமது மகளை யழைத்துவந்து நாயனார்பாதத்தில்வீழ்ந்து வணங்கும்படிசெய்தார்.

மாவிரதியார் தன்னை வணங்கிய அப்பெண்ணின் தலைமயிரைப்பார்த்தார். அதுமிகவும் அழகாகக் கறுத்து நீண்டு வளர்ந்திருந்தது. மானக்கஞ்சாறரை நோக்கி இப்பெண்ணின் தலைமயிர் நமக்குப் பஞ்சவடியாகப் பயன்படுமென்றார். பஞ்சவடியென்பது மயிரினால் அகலமாகச் செய்து மார்பில்பூணூலாகத் தரித்துக்கொள்ளும் கயிறும், உடனே மானக்கஞ்சாறர் தமது வாளாயுதத்தைக்கொண்டு, தப் பெண்ணின் தலைமயிரை அறுத்து மாவிரதியாரிடம் கொடுத்தார், உடனே மாவிரதியார் தமதுருவத்தை விட்டுவிட்டு வழக்கம்போல ஆகாயத்தில் பார்வதியுடன் காளைமாட்டில் காணப்பட்டாராம். மானக்கஞ்சாறர் கண்டு வணங்கினாராம். (மாவிரதம் என்பது சைவமதப்பிரிவில் ஒன்று. அம்மதத்தைச் சேர்ந்தவர்கள் பரமசிவனை எலும்புமாலை தரித்திருக்கும் உருவத்துடன் வணங்குவர். தாமும் எலும்புமுதலியவற்றை யணிந்திருப்பர். இவர்களைத்தான் மாவிரதிகள் என்பது)

இக்காரியம் நடந்ததின் பிறகு, மாப்பிள்ளையாகிய கலிக்காமநாயனார் பெண்வீட்டுக்குவந்து சேர்ந்தார், அங்கே நடந்த செய்தியைக் கேள்விப்பட்டு மகிழ்ச்சியடைந்தார்- ஆனாலும் மொட்டையடித்த பெண்ணை மணஞ்செய்துகொள்வது சாஸ்திரவிரோதமாகுமென்று மனந்தளர்ந்தாராம். அப்போது பரமசிவன் ஏயர்கோன் கலிக்காமரிடம் அசரீரியாக "கலிக்காமா! நீ மனம் வருந்தவேண்டாம். இப்பெண்ணுக்கு மீண்டும் கூந்தலைக் கொடுக்கின்றோம். நீ மணஞ்செய்துகொள்" என்று ஆகாயத்திலிருந்து சொன்னாராம். உடனே பெண்ணுக்கும் முன்போல மயிர்வளர்ந்துவிட்டதாம்- பிறகு கலியாணமும் நடைபெற்றது.

இது பெரியபுராணத்திற் கூறப்படும் கதை. திருத்தொண்டத் தொகையில் "மலைமலிந்த தோள் வள்ளல் மானக்கஞ்சாறன்" என்று மட்டிலும் கூறப்பட்டிருக்கின்றது. வேறு ஒருவித வரலாறுங் காணப்படவில்லை. திருத்தொண்டர் திருவந்தாதியில், "சிவனடியார்க்குத்தான் மகளின் தலைமயிரை அறுத்துக்கொடுத்தார்" என்று சொல்லப்படுகின்றது- இனி இக்கதையின் உண்மையைச்சிறிது ஆராய்வோம்.

பெண்மக்களை எவ்வளவுதூரம் அவமானப்படுத்த வேண்டுமோ அவ்வளவுதூரம் அவமானப்படுத்துங்கதைகளில் இதுவும் ஒன்றாகுமென்று கூறலாம். மானக்கஞ்சாறர் தமது பெண்ணை அவள் சம்மதத்தை யறியாமலே, அவள் கூந்தலை யறுத்தார்- கலிக்காம நாயனாருக்கு மணஞ்செய்து கொடுக்க முடிவுசெய்தார் என்று தீர்மானிக்கலாம்.

பரமசிவன் மாவிரதி வடிவத்துடன் வந்தாராம். அந்த மாவிரதி தம்மை வணங்கிய பெண்ணிற்குத்தான் செய்யவேண்டியதென்னவென்பதை ஒரு சிறிதும் உணராமல் அவளுடைய தலைமயிரைக் கேட்டாராம். இது ஒரு அடியாரின் செயலாகுமா? அதுவும் பரமசிவன் செயலாகுமா? பரமசிவக் கடவுள் தனது அடியாராகிய மானக்கஞ்சாறருடைய அன்பைச் சோதிக்க வேண்டுமாயின் இருந்த இடத்திலிருந்து கொண்டே சோதித்திருக்கக்கூடாதா? கடவுள் என்றிருக்கின்றவர்கூட சோதனை பண்ணித்தானா ஒன்றைத் தெரிந்துகொள்ளவேண்டும்? சோதனை பண்ணாமல் தானே தெரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் இல்லாதவர் கடவுள் ஆவாரா? அதிலும் கல்யாணம் ஆகப்போகும் பெண்ணின் தலைமயிரைக்கொடு என்பதன் மூலமாகவா ஒரு பக்தரின் அன்பைச் சோதிக்கவேண்டும்?

மானக்கஞ்சாறர் தனது பெண்ணின் தலைமயிரை— அதுவும் அறிவுவரப்பெற்ற பெண்ணின் தலைமயிரை அறுத்து ஒரு பிச்சை வாங்கும் பரதேசிக்குக் கொடுக்கும்போது அப்பெண்ணும் ஒன்றுஞ் செய்யாமல் சம்மதித்திருந்தாள் என்றால், ஆடவர்களுக்குப் பெண்கள் அடிமையாக இருக்கவேண்டுமென்பதைப் பெரிய புராணம் போதிக்கின்றதன்றோ? ஆடவர் எது செய்தாலும் பெண்கள் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டுமா? பிறகு மொட்டைப் பெண்ணைஎப்படி மணஞ் செய்துகொள்வதென்று கலிக்காம நாயனார் மனங்கலங்கி நின்றபோது பரமசிவன், அசரீரியாகவிருந்து சமாதானங்கூறி உடனே அப்பெண்ணுக்கு மயிர்வளரும்படி செய்தாராம்- இது இயற்கைக்கு எவ்வளவு பொருத்த முடையதென்பதை ஆலோசித்துப்பாருங்கள்? மயிரை அறுத்த சிலநிமிஷத்திற்குள் மீண்டும் முன்னிருந்ததுபோலவே மயிர் வளர்ந்துவிட்டதாம்? இவற்றையெல்லாம்ஆலோசிக்கும்போது இக்கதை எவ்வளவுதூரம் உண்மை,என்பதைநீங்களேஆலோசித்துக்கொள்வீர்களாக,

---

பார்ப்பனனிடமிருந்து விபூதி வாங்காததால் ஜாதிப்பிரஷ்டம்

26-10-28-ல் எனது திருமண ஊர்வலத்தின்போது எங்கள் சொந்த மாரியம்மன் ஆலயத்திற்குச் செல்ல அங்கிருந்த பார்ப்பான் சூட தீபாராதனை செய்து காண்பித்து விபூதி கொடுத்தான். நான் விபூதி அவனிடமிருந்து வாங்காமலே யானே எடுத்து அணிந்துக்கொண்டேன். அதன் பின் பார்ப்பான் எனக்கு மாலையிட வந்தான். நான் அவனை போடவிடாமல் கையில் தரும்படி கேட்டேன். ஷை யான் அப்படி கையில் கொடுத்துப்போடுவது வழக்கமில்லை என்று மறுத்து அப்புறம் என் கையில் கொடுத்தான். யானே மாலை அணிந்து பெண்ணுக்கும் அணிந்து தேங்காய் பழம் எடுத்துக்கொண்டேன்.

தேங்காய் பழம் எடுத்துக்கொண்டவுடன் என்னுடன் இருந்த என் அத்தான் தட்சணை கொடுப்பது வழக்கமென்று 2 அணாவை கொடுத்தார். பார்ப்பனன் அதையும்பெற்றுக்கொண்டு "இம்மாதிரி தங்கள் குருக்களை தங்கள் வேலைக்காரர்களைப்போல் கேவலப்படுத்திவிட்டீர்கள். ஆகையால் இனிமேல் யான் இந்த கோவிலில் இருக்கமுடியாது; இக்ஷணமே சம்பளக்கணக்கு தீர்த்துக் கொடுக்கவேண்டும்" என்று என் உறவின் முறையாரிடம் விண்ணப்பம் செய்துகொண்டான். செய்தவுடனே என்னையும் விசாரியாமல் யான் செய்தது குற்றம்தான் என்று ஒருசில பகுதியார் தாங்களாகவே தீர்மானம் செய்துகொண்டு இன்றைக்கு என்னைக்கூப்பிட்டு விசாரித்தார்கள். விசாரிக்க "யான் செய்தது குற்றமல்ல" என்று வாதித்தேன். "உறவின் முறையோரெல்லாம் சேர்ந்து குற்றமென்று முடிவு செய்திருக்க நீ குற்றம் செய்யவில்லை என்று மறுக்கிறாய். இது இன்னும் இதைவிட அதிக குற்றம் ஏற்படும், ஆகையால் பார்ப்பானிடம் விபூதி குங்குமம் மாலை இவை நீதானாய் எடுத்துக் கொண்ட குற்றத்துக்காக உடனே யாவருக்கும் வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கோள" என்றார்கள். மறுபடியும் யான்செய்தது குற்றமல்ல என்று விளக்கினேன். அப்புறம் அவர்களாய் தீர்மானித்து என்னையும் என் தாய்தந்தையரையும் ஜாதி பிரஷ்டம் என்று உடனே தள்ளிவைத்து விட்டார்கள். எந்த கவர்ன்மெண்டிலும் இம்மாதிரி 'நியாயம்' கிடைக்காது. இவ்வளவு ஒழுங்கான உறவின்முறையாருடன் இருப்பதைவிட தனியே இருப்பது நல்லதுஎன்று தற்சமயம்சந்தோஷமாய் விலகி இருக்கிறேன். என்றைக்கு என் உறவின்முறையார் சுயமரியாதை பெறுவார்களோ!

வே. மா. கி. சிங்காரவேல்.

சாத்திரமும் மூட மக்களும்.

(தேம்மாபட்டு அ. சோமசுந்தரம் எழுதியது)

சாஸ்திரங்களின் பெயராலும் சாமிகளின் பெயராலும் எழுதிவைக்கப்பட்ட சுவடிகளையும், அதை ஒட்டி ஊரார் பணத்தை ப்பறித்து தலையணைக்குப் பஞ்சு திணிப்பதுபோல விலாப்புடைக்க உண்டு மலைப்பாம்பைப்போல கொழித்துக்கொண்டு திரியும் சுயநலக்கூட்டத்தின் பசப்பு வார்த்தைகளையும் கண்மூடித்தனமாய் நம்பி அவர்களைப்பின்பற்றி வந்ததினால்தான் நாமும் நமதுநாடும் ஆட்டத்திலிருக்கிறோம் என்பது யாவரும் அறிந்ததே.

மக்களுள் விசாலமான பொது அறிவு வளர்ச்சி குன்றி பழக்கவழக்கமென்னும் அசட்டுத்தனம் மேலோங்க நமது சாத்திரங்களல்லவா இடந்தந்தன. துர்நாற்றமுடைய குட்டைகளிலெல்லாம் தீர்த்தமென விழுந்து குளிக்கிறார்கள். புழுதியும் எச்சிலும் நிறைந்த தெருக்களில் அங்கமெல்லாம்பட புரளுகிறார்கள்- நெருப்பில் சுட்டுக்கொள்ளுகிறார்கள். நாவிலும் உடலிலும் சூலாயுதம வேலாயுதமென்று குத்திக்கொள்ளுகிறார்கள். தலையை மொட்டையாக்கி கரும்புள்ளி செம்புள்ளி குத்திக்கொள்ளுகிறார்கள்- இவைகளெல்லாம் சாமியின் வேண்டுதலையாம்.

இந்த மூடச்சடங்குகளெல்லாம் தெய்வத்திற்கு வேண்டற்பாலனவா? இந்த அநாசாரமான செய்கைகளெல்லாம் மூடமக்களாலும் ஏன்? படித்தவர்களென்பவர்களாலுங்கூட நடைபெற்று வருகின்றன, இதைப் போன்ற இதனிலும் மிகக் கேவலமான செய்கைகளெல்லாம் நம்மவர்களிடம் இருப்பதை அறிந்திருந்தும் அதைநீக்கிக்கொள்ள நம்மிடம் போக்கியதை யில்லாமலிருக்கையில் இந்தியத்தாயின் ஆசிரியை ஸ்ரீமதி "மேயோ" வைக் கோபித்துக்கொள்ள நம்மிடம் என்ன நியாயமிருக்கிறது? அத்திப்பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் சொத்தை" என்பதைப்போல நமது சாத்திரங்களைப் புரட்டிப்பார்த்தால் எல்லாம் பூச்சியும் புழுக்களுமாகத்தான் காணப்படுகிறது. இவைகளைப்போக்க முன்வருவாரில்லை,

"பிராமணன் சம்பளம் கொடுத்தேனும் கொடாமலேனும் சூத்திரனிடத்தில் வேலை வாங்கலாம் ஏனெனில் அவன் பிராமணனுக்கு ஊழியம் செய்யவே பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான் (மனு அத்.8 சு.413)

"பிராமணன் சந்தேகமின்றி......சூத்திரனிடத்திலிருந்து பொருளை வலிமையாலும் எடுத்துக்கொள்ளலாம், எஜமான் எடுத்துக்கொள்ளத்தக்க பொருளையுடைய அந்த சூத்திரன் தன் பொருளுக்குக் கொஞ்சமும் சொந்தக்காரனல்ல (அத்.8 சு 417)

"மாதர்கள், நலமுள்ள காவலரை வைத்து வெளியில் போகவொட்டாமல் வீட்டிலேயே நன்றாகக் காப்பாற்றினாலும் காக்கப்படமாட்டார்கள் (அத்9 சு12)

"மாதர்கள் கற்புநிலையின்மையையும் நிலையாமனமும் நட்பின்மையும் இயற்கையாக உடையவர்கள். (அ 9 சு 15)

இத்தன்மையாக சுயாலத்தையும் வியசாரத்

மலாய் நாட்டு நிருபம்

கனம், "குடி அரசு" பத்திராதிபர் ஐயா அவர்களுக்கு நான் "தமிழ் நாடு" பேப்பரிலும் மலாய் நாட்டில் வெளியாகும் "தமிழ் நேசன்" பேப்பரிலும் சந்தாதாரனாக சேர்ந்திருக்கிறேன். தற்சமயம் எனது அன்பர் கா. கு. கோவிந்தசாமி பிள்ளைக்கு வரும் "குடி அரசு" பத்திரிகையை நான் பார்த்ததில் நம இந்திய மக்களின் முன்னேற்றத்திற்கு சுயநலங்கருதாது ஜன சமூகத்திற்கு சுயமரியாதைக்காக உழைத்து வருகிறது "குடி அரசு பத்திரிகை ஒன்றுதான் என்று தெளிவாக தெரிந்து ஷை எஸ்டேட்டில் வேலை செய்துவந்த ராமகிருஷ்ண கவுண்டர் பெண்ஜாதி தனபாக்கியத்தம்மாள் 29-9-28ல் சிவலோக பதவியடைந்ததை முன்னிட்டு 15-10-28லும் எனது சகோதரன் சி. மு. அப்பாய் நாயுடு சம்சாரம் சின்னம்மாள் 6-10-28ல் சிவலோக பதவியை அடைந்ததை முன்னிட்டு 21-10-28-லும் பார்ப்பன புரோகிதத்தை அறவே ஒழித்து கருமாதி முதலிய சடங்குகளும் பக்துமித்திரர்களைக் கொண்டு அதிவிமரிசையாய் செய்து 200 ஏழை ஜனங்களுக்கு சமபந்தி போஜனம் அளித்ததோடு நம் மக்களின் முன்னேற்றத்திற்குபாடுபட்டுவரும் "குடிஅரசு" பத்திரி

தோஷத்தையும் கற்பிக்கும் மநு(அ)தர்மசாத்திரத்தைவிடவா மேயோவின் "இந்தியத் தாய்" நம்மை இழிவுபடுத்திவிட்டது?

இது நிற்க இனி எடுத்துக்கொண்ட விஷயத்தைக் கவனிப்போம், நெற்றி வியர்வை நிலத்திலவிழ இரவு பகலாய்ச் சம்பாதித்து சாமி சாமி யென்று நடுவிலிருக்கிற சோம்பேறி(ஆ)சாமிகளுக்குக் கொடுத்துவிட்டு ஏமாந்துபோகிறீர்களே என்று யாராவது கூற வந்தால் நாஸ்திகப்பட்டம் தயாரிலிருக்கிறது. இருந்தாலும் அதைப்பற்றி யாருக்கு க்கவலை? ஆனால் கடைசியாகக் கூறுவது என்னவென்றால், வேதத்தையும், சாத்திரத்தையும், சாமி,'இருஷி'ச்சாமி 'முனி'ச்சாமி ஆசாமிகளுக்கு உபதேசித்த தென்பதெல்லாம் வயிறுவச்சாமியின் பிழைப்புக்காகவே என்பதை நாம் உணர்ந்தாலன்றி நாம் முன்னுக்குவர முடியாது. எனவே நமது மாபெருந்தலைவர்கள் கோலியிருக்கும் சுயமரியாதைப்போரில் ஈடுபட்டு நம்மைச்சூழ்ந்து நிற்கும் அடிமைத்தனம் மூடவழக்கம் என்ற சத்துருக்களை முறியடித்து வெற்றியடைவோமாக! எழுமின்! எழுமின்!

காரைக்குடி நலஉரிமைத்தொண்டர் சங்கத்தலைவர்கட்கு விண்ணப்பம்.

சீர்பெறு மூலகேனூர் திருமகடனுக்கு—ஏர்பெறுந நலணி திலகமாமென—சொல்லுறைமேவிய தொன்மைமிக்க—பல்வளம் படைத்த பாண்டி நாட்டகனுள்—வானுறை கின்சிசூழ் மாடமாளிகைகளும்—தேனுறை மலர்க்காகிசை செறாலும் பொலிவுற—இருநிதிக்கிழவனிறுமாப்படங்க—பெருநிதிபடைத்த பெருந்தகையாளரும்—அறநெறிபிறழா ஆண்டகையோரும்—மறநெறிதுறந்தமாண் பெருந்தகைவரும்—இயலிசைநாடகமெனு முத்தமிழின்—திறமையின்மிக்க திருமிகு செல்வரும்—அண்டர்கள்போற்ற அரும்பெறும் செயல்புரி—தொண்டர் குழாமும்சூழுறவோங்கும்—திருமிகு காரைச்செல்வமாநகரில்—அரியதாம் நலஉரிமைத் தொண்டர் சங்கமும்— அன்னதன் சார்பாலமை வித்தியாசாலையும்—நன்னலத்தாவே நயமுடனிருவிமுதலாவதாண்டின் திருவிழாவை—மாவிலத்தவர்கள் மகிழ்வுற நடத்திய

அன்பர்காள்! உங்கட்கு எனது மனமார்ந்த வந்தனம். தங்கள் சங்கம் 'சொல்லன்று செயலேதேவை' யென்ற நன்மொழிக் கிலக்கியமாக ஏழைமக்கள் மீதுவைத்த கருணைமாறாது அன்னவர்கள் நன்னெறி தழுவி முன்னேற்றமடைவதற்குரிய வழியைக்காட்டியும் உயர்வு தாழ்வென்று நினையாது அனைத்துயிர் ஒன்றென்னும் உண்மை அறிவு மக்களிடம் வளரவும் சமயச்சண்டைகள் ஒழியவும் செய்து வாழுகுமென்று உன்னி அது நீடூழி வாழ வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

அன்பன் ரா. சி. மெய்யப்பன், மட்பிர.

கைக்கு இரண்டு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது. நம் தாய் நாட்டு சகோதரர்களும் மலாய்நாட்டில் வசிக்கும் இந்திய சகோதரர்களும் பார்ப்பனீயத்தை ஒழித்து சுயமரியாதை இயக்கத்தை ஓங்கச்செய்வார்களென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன், இத்துடன் இன்றையதினம் ரூபாய் .6—0—0 மணிஆர்டர் செய்திருக்கிறேன். இதில் நன்கொடைக்குள்ள ரூபாய் இரண்டு போக பாக்கி ரூபாய் நாலுக்கும் தங்கள் பத்திரிகைக்கு என்னை ஒரு சந்தாதாரனாக சேர்த்துக்கொண்டு பத்திரிகையை அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சி. மு. சின்னண்ணன் நாயுடு
சுங்கை கரட் போஸ்ட், மலேயா.

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தக்க ஆபரணம் போல்இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும்.5வருஷம் உத்தரவாதம். ரூ 4-15-0 வி. பி. வேறு

ஜீனன் வாட்சு கம்பெனி
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

இதிகாசங்கள்.

இராமாயணம்-அயோத்யாகாண்டம் (கட்டுரை 5)

திரு: சந்திரசேகரப் பாவலர் எழுதுகிறார்.

சென்ற கட்டுரையில் இராமன் பலதாரகமனன் என்பதைப்பற்றி விவரித் தெழுதினோம். சில நண்பர்களுக்கு அதில் ஐயுறவு தோன்றியதாலே யே விவரித் தெழுதவேண்டியதாயிற்று. ஏதாவது ஐயுறவு தோன்றுங்கால் உடனே வால்மீகியை யாவது மொழி பெயர்ப்பையாவது நோக்க நண்பர்களை வேண்டுகிறோம். ஏனெனில் நாம் எழுதுவனவெல்லாம் வால்மீகி கூற்றுக்கு ஓர் எழுத்தேனும் அதிகமாக் இருக்கா. நமக்கு இராமனிடத்திலாவது வேறு யாரிடத்திலாவது விருப்பேனும் வெறுப்பேனும் இல்லை. உண்மையை உலகத்துக்கு எடுத்துக் காட்டவேண்டுமென்பதே நமது நோக்கம். தமிழ் மக்களைப்பற்றி மிகவும் கேவலமாக எழுதி வைத்துப் பகைத்துவரும் ஆரியகுலத்தைச்சேர்ந்த ஒருவனும் சகோதரத் துரோகியும் நயவஞ்சகனும் பலதாரகமனனுமாகிய இராமனை தெய்வம் போலப் பாவித்து வணங்குகின்றவர்களாகிய தமிழ்மக்களை உண்மையுணரச்செய்வதற்காகவே நாம் இக்கட்டுரையை எழுதுகிறோம். ஆதலின் இதனைப்படிக்கும் எமது உடன் பிறப்பினர் அனைவரும் நாம் எழுதுவன அனைத்தும் உண்மைமொழி யென்பதை இனியேனும் தெரிந்துகொள்ள வேண்டுகிறோம். நிற்க

மூன்றும்கட்டுரையின்தொடர்ச்சியாக வரலாற்றின்மேற் செல்லுதும். கைகேசி கோப அறையில் விழுந்துகிடக்கின்றாள் என்பதை முன்னர் ஆராய்ந்தோம்.

தசரதன், முடிசூட்டிற்கு வேண்டியவைகளைச் செய்யக் கட்டளையிட்டு சபையோரிடம் அநுமதி பெற்றுக் கைகேயின் அந்தப்புரம் வந்தான். அது பலவித அலங்காரங்களோடும்தேவலோகம்போல் விளங்கிற்று. வழக்கமான படுக்கையில் கைகேசியைக்காணுசவனாய் அப்பொழுது அவன் காமத்தை உண்டாக்கும் பொருள்களாற் சூழப்பட்டு அவளைப்புணர்வதற்குரிய காலமாதையால் மன்மதபாணங்களால் அடிக்கப்பட்டு அவளைத்தேடிக் காணுமையால் அங்கேயிருந்த அந்தப்புர அதிகாரியிடம் கேட்டான். அவன் கைகேசி கோப அறைக்குப்போனதைக் கூறினான். அதுகேட்ட தசரதன் மிகுந்த துக்கத்தோடும் அங்கே ஓடிப் போய் அவளைக்கண்டான்.

தசரதனோ கிழவன், கைகேசியோ பால்யம்வாய்ந்தவள் அவள்வருத்தத்தைக்கண்டு அவன்மனம் சகிக்கவில்லை. அதிகபுத்திமானுயிருந்தும் அவளிடம் வைத்த பிரியத்தால் அவனுக்கு ஒன்றும்தோன்றவில்லை. அவளுடைய அழகால் புத்திமயங்கினவனாய் அவன் அவளைத்தடவிக்கொடுத்து,தாமரையிதழ்களைப் போன்ற அவளுடைய கண்களைப்பார்த்தவுடனே எல்லையற்ற ஆசைகொண்டு அவளுக்கு வசப்பட்டு "கைகேசி அழாமல் உன்வருத்தத்திற்குக் காரணத்தைச் சொல். தகாதபாவச்செயல்களைச் செய்தாவது, என் உயிரைக் கொடுத்தாவது உன் கவலையை நீக்குவேன். என்புண்ணியத்தின்மேல் ஆணைவைத்துச் சொல்லுகின்றேன்"என்றான். அதுகேட்ட கைகேசி, தசரதன் மன்மதபாணங்களால் அடிக்கப்பட்டு காமவிகாரத்திற்கு வசப்பட்டு, கேட்டதைக் கொடுக்கத் தயாராயிருக்கிறானென்பதை அறிந்து "எனக்கு உடம்பில் அசௌக்கியமில்லை. எனக்கு உம்மால் ஒருகாரியம் ஆகவேண்டும், நான் சொல்லும்விதமாய் பிரதிக்ஞைசெய்தால்அதைச்சொல்வேன்" என்று கூறினள்.

அதைச்செவியுற்ற தசரதன் "நான் பயந்தபடி இவளுக்கு உடம்பில் அசௌக்கியமில்லாமற்போனது என்பாக்கியமே" என்று புன்சிரிப்புடன் அவளுடைய முகத்தை நன்றாய் ஆசைதீர பார்க்க வேண்டுமென்று அவளைத்தூக்கி எடுத்து தன் மடிமீது வைத்துக்கொண்டு அவளிடத்தில் வைத்திருக்கிற எல்லையற்ற காமவிகாரத்தால் என்ன சொல்லுகிறோமென்று யோசிக்காமல் "அழகில் சுட்றவளே! என் உயிருக்குயிராகிய இராமன்மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நீ வேண்டுவதைச் சொல்லி என்னைக்காப்பாற்று. பார்ப்பவர் கண்களையும் மனதையும் கவரும உன் அழகின் மகிமையையும் என திறமையையும் நீ முழுதும் தெரிந்தும் இப்படி ஐயுறலாமா?" என்றான்.

கைகேசிக்கு அவ்வாக்குறுதியால் சந்தேகம் தீர்ந்தது. ஆனல் தான் கேட்டபின் அவன் மறுத்தலும் கூடும்; ஆகையால் அவன் வாக்கை உறுதி செய்து அவனைக்கட்டுப்படுத்த எண்ணி கைகேசி "நீர் கூறிய வாக்குறுதி உண்மையானல் அதை முப்பத்து முக்கோடி தேவர்களும் மற்றெல்லோரும் கேட்கட்டும். தேவதைகளே, நீங்களே இவர் வாக்குறுதியை நன்றாகக் கேட்டு இதற்குச் சான்றுவீர்கள்" என்று உரக்கக் கூவினள். இவ்வாறு அவனைக் கட்டுப்படுத்தினள். அவன் காமத்தால் மோகித்து எதைக் கேட்டாலும் கொடுப்பானென்ற நிச்சயத்தால் "நான் சம்பரப்போரில் உமது உயிரைக் காப்பாற்றியதற்காக இரண்டு வரங்கள் தந்தீர்; இப்போதும் நான் எதைக்கேட்டாலும் கொடுப்பதாக மறுபடியும் வாக்குறுதி செய்தீர். இப்போது அவைகளைக் கேட்கப்போகிறேன். நீர் தராது மறுத்தால் நான் உம்மால் அவமானம் செய்யப்பட்டு உயிரை மாய்ப்பேன்" என்றாள்.

தசரதன் அவளுக்கு வசப்பட்டு "அவைகளைக் கொடுத்தேன், கேள்" என்றான். இப்படிக் காமத்தால் மோகித்துக் கேட்ட வரங்களைக் கொடுக்கத் தயாராயிருக்கும் தன் கணவனைப் பார்த்து கைகேசி "முதல்வரம் இராமன் முடிசூட்டுக்குச் சேகரித்த பொருள்களைக்கொண்டே என் மகன் பரதனுக்கு முடிசூட்ட வேண்டும். இரண்டாவது வரமாவது, இராமன் மரவுரி முதலியன அணிந்து பதினான்கு ஆண்டுகள் காடேக வேண்டும். தாமதம் கூடாது; உமது வாக்குறுதியை நினைவு கொள்ளும். கடன் வாங்கினவனைக் கடன் கொடுத்தவன் கேட்கும் போது அவனுக்கு வருத்த முண்டாகும். ஆனல் அது குற்றமா? இராமன் இன்றைக்கே காட்டிற்குப் போவதை நான் பார்க்க வேண்டும். சத்தியத்தைக் காப்பாற்றுவதே நற்கதிக்கு வழி" என்று கூறினள். இடியொலி கேட்ட நாகம் போல தசரதன் அறிவிழந்து வீழ்ந்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இதனல் தசரதன் மிகவும் காமவிகாரத்தில் ஈடுபட்டவனென்பது தெளிவாகிறது. அதனலேயே பட்டத்து மனைவியர் மூவரோடு அறுபதினாயிரம் காமக்கிழத்தியரையும் வைத்திருந்தவனாவான். தசரதன் கிழவனென்றும் கைகேசி பாலியமானவளென்றும் இவ்வரலாற்றில்கூறப்படுகிறது.

முன் வரலாறுகளால் தசரதனைப் போலவே அவன் மனைவியரும் வயதானவரென்றே தெரிய வருகிறது. இங்கே கைகேசி பால்யமானவளென்று சொல்லப்படுகிறாள். இது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. கைகேசியை பால்யமானவளென்று கொண்டால் அவளை அவள் தந்தையாகிய கேகயமன்னன் அறுபதினாயிரத்தின் மேலும் வயதான தசரதனுக்கு எவ்வாறு மணஞ் செய்துகொடுத்தாரோ? இவ்வளவு வயதான கிழவனாகிய தசரதனிடம் அவள் என்ன இன்பந்தான் பெற்றாளோ? மகனுக்கு விடிந்தால் முடிசூட்டு. தந்தையாகிய தசரதன் கைகேசியைப் புணர்வதற்கு மிகவும் காமவிகாரத்தோடு இவ்வாறு தட்டழிகிறான். என்ன ஆச்சரியம்? கோப அறைக்குஓடிப்போய் அவளுக்கு கோயோ யெனஐயுற்றுகயலைப்படுகிறான். உடம்புக்கு ஒன்றுமில்லையென்று அவள் கூறவே தன் தீயகாரியத்திற்கு இடைஞ்சலில்லை யென்று மகிழ்கிறான். இவனுடைய காமவெறியைப்பற்றி வால்மீகி முனிவர் மேலேகுறித்த கதையாலேயே பல இடங்களில் கூறுகிறார். தசரதன் காமவிகாரத்தால் சத்தியம் செய்கிறவன் பின்னல் தன் சொல்லை மாற்றினலும் மாற்றுவானென்றே அவனைக் கட்டுப்படுத்துவதற்கு அவன் வாக்குறுதியைப் பலரும் அறியும்படி கைகேசி சத்தமிட்டு கூறுகிறாள்.

தசரதனோ, தன் இழிந்த தன்மைக்கேற்ப, குற்றமில்லாதவரைக் கொலை செய்தல், கொலை செய்தோரைவிட்டுவிடுதல் முதலியதான செயல்களைக்கூடச் செய்வதாகக் கைகேசியிடம் கூறுகிறான். இவ்வளவுஈனம் கேவலமான புத்தியையும் ஒழுக்கத்தையும் உடையவனுகிய தசரதனை நல்லவனைப்போலக் காட்டி உலகத்தாரை ஏமாற்றினார் கம்பர். தசரதனைப் பற்றிய மேலே கண்ட கேவலமான வரலாறு முழுவதையும் கம்பர் கூறாமல் மறைத்தார்.

சபையாரிடத்திலே விடை பெற்றுக்கொண்டு தனியாக கைகேசியை நாடிவந்த தசரதனை அவளுடைய அரண்மனைக்கு மன்னர் பலர்சூழ வந்தான் என்று கம்பர் கூறுகிறார். ஆதலின் உண்மைக் கதையை மறைப்பதே அவருடைய நோக்கம்போலும்! 'அவன் தனிமையே கோப அறை சென்று கைகேசியைக் கண்டான்'என வால்மீகி கூற, கம்பரோ வேலைக்காரிகளோடும் சென்று அவளைக் காண்பதாகக் கூறுகிறார். இதெல்லாம் தசரதனுடைய கேவலமான காமவெறித்தன்மையை மறைத்து அவனை நல்லவனைப்போல உலகுக்குக் காட்டி மயக்கப்போலும்!

தசரதன் கைகேசியினுடைய அழகிய முகத்தைப் பார்த்து மகிழ்வதற்காக அவளை யெடுத்து மடிமீது வைத்துக் கொள்கிறான் என்று வால்மீகி கூறியிருக்க, கம்பரோ அவன் அவளை வாரியெடுத்ததாகவும் அவள் அவன் கையைத்தள்ளிக் கீழே மறுபடியும் விழுந்தாளென்றும் கூறுகிறார். தசரதன் தன்னிடம் கைகேசி பேசிய பின்னரே அவளைத்தூக்கி மடிமீதுவைத்துக் கொண்டானென்று வால்மீகி கூறுகிறார்; கம்பரோ போனவுடனே அவன் அவளைத்தூக்கியதாகக் கூறுகிறார்.

தசரதன் முதலில் தன் புண்ணியத்தின் மீது ஆணையிடுகிறான், பின்னரே இராமன்மேல் ஆணையிடுகிறான். அவன் தன் புண்ணியத்தின்மேல் ஆணையிட்டதைக் கம்பர் கூறாதுவிடுத்தார்.

மேலேகண்ட வரலாற்றை வால்மீகி பத்து பதினொன்று என்ற இரண்டு சருக்கங்களிலே மிகவும் விவரமாகக் கூறியிருக்கக் கம்பர் அதையே கைகேசி சூழ்வினைப்படலத்தில் முதற் பத்து பாடல்களால் மிகச் சுருக்கிக்கூறுகிறார். இது தசரதனுடைய இழிகுணத்தை மறைக்கவே.. இனிமேற் செல்லுதும்.

வரப்பெற்றோம்

கொழும்பு ஜே. பி. கிறிஸ்டியன் & சன்ஸ் கம்பெனியார் அவர்கள் அன்புகூர்ந்தனுப்பிய 1929-ஆம் வருடத்து "நேஷனல் காலண்டர்" இரண்டு வந்தனத்துடன் வரப்பெற்றோம். ஷை காலண்டர்கள் 16x24 அங்குல அளவில், நல்ல தடித்த பளப்பளப்பான ஒரே தாளில், இலங்கை தேசாபிமானிகள் ஐம்பத்தொருவரின் திருவுருவங்கள் கொண்டதாய், சுவரில் தொங்கவிடக்கூடியபடி இருபக்கங்களில் சட்டங்களுடன் மினுர்கின்றன.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-ஹு ஐப்பசி-மீ 26-உ

மந்திரி
S. முத்தையா முதலியார் வாழ்க! வாழ்க! வாழ்க!

உத்தியோகத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்.

நமது மந்திரி திரு S. முத்தய்யா முதலியார் அவர்கள் தமது ஆதிக்கத்தில் உள்ள முக்கிய இலாக்காவில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள்கையை நிலைநாட்டிவிட்டார். அதாவது, பத்திரப்பதிவு இலாக்கா உத்தியோகத்திற்கு நபர்களை நியமிப்பதில் அடியில்கண்ட வகுப்புவாரிப்படி தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டும் என்பதாக ஒரு விதி ஏற்படுத்தி, அதை கவர்னர் பிரபுவாலும், மற்ற மந்திரிகள், நிர்வாக சபை அங்கத்தினர்கள் முதலியவர்களாலும் சம்மதம்பெற்று அமுலுக்கு கொண்டுவரவேண்டியதான சட்டமாக்கிவிட்டார். அதாவது, பத்திரப்பதிவு இலாக்கா உத்தியோகத்திற்கு நியமிக்கவேண்டிய ஸ்தானங்கள் 12 இருக்குமானால் அவைகளில்

பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்பவர்களிலிருந்து	5
பார்ப்பனர்களிலிருந்து	2
மகம்மதியர்களிலிருந்து	2
ஐரோப்பிய ஆங்கிலோ இந்தியர்கள் அடங்கிய கிறிஸ்தவர்களிலிருந்து	2
தாழ்த்தப்பட்டவர்களிலிருந்து	1
ஆக	12

நபர்களை வகுப்புவாரி முறையில் தெரிந்தெடுத்து நியமிக்கவேண்டும் என்கின்ற சட்டம் செய்திருக்கிறார். எனவே மேல்படி இலாக்காவுக்கு எவ்வளவுபேர் தேவை இருந்தாலும் இந்த விகிதப்படியே நியமிக்கப்பட வேண்டும் என்பதாகும். இந்த திட்டத்தின் விகிதங்களில் 100க்கு 3 வீதம்ஜனத்தொகை உள்ள பார்ப்பனருக்கு 100க்கு 16 உத்தியோகம் வீதமும், 100-க்கு 20 விகிதத்திற்கு மேல்பட்ட மகம்மதியர்களுக்கு 100க்கு 16 வீதமும், 100க்கு 20 வீதம் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் என்கின்ற வகுப்பாருக்கு 100க்கு 8 வீதமும் உத்தியோகங்கள் பங்கு பிரித்துக்கொடுத்திருப்பதானது மிகவும் அநியாயமானதென்றே சொல்லுவோம். ஒருசமயம உத்தியோகத்திற்கு ஏற்ற நபர்கள் குறைவான பங்கு கொடுக்கப்பட்டிருக்கும் வகுப்புகளில் கிடைக்கவில்லை என்று யாராவது, சமாதானம்சொல்ல வருவார்களானால் அது அந்த வகுப்பார்களுக்கு உத்தியோகங்கள் கொடுப்பதில் அவர்களுக்கு செய்திருக்கும் கொடுமையைவிட பலமடங்கு மேல்பட்ட கொடுமையாகும், என்னவெனில், உத்தியோகப்பங்கில் மண்ணைப் போட்டதல்லாமல் அந்த வகுப்புகளை உத்தியோகத்திற்கு லாயக்கில்லை என்று அவமானப்படுத்தியதாகும். இந்த திட்டத்தை மகமதியர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் ஒப்புக்கொள்வதானது "பிச்சை போடாவிட்டாலும் கவலையில்லை, தயவுசெய்து நாயை பிடித்து கட்டுங்கள்" என்றபடி ஒரு வீட்டில் பிச்சைக்கு போன ஒருவர்மீது வீட்டுக்காரர் நாயை அவிழ்த்துவிட்டு கடிக்கச்சொன்ன போது எஜமானனைப்பார்த்து அந்தப்பிச்சைக்காரர் கெஞ்சினதுபோல்தான் ஆகும்.

எனவே,யார்யாருக்குஎவ்வளவு பங்கு என்பதை தீர்மானித்துக் கொள்ளும் விஷயத்தில் சற்று கஷ்டமோ அதிருப்தியோ இருந்தாலும் சர்க்கார் உத்தியோகம் என்பவைகள் பொது சொத்தென்பதையும் அதில் எல்லோருக்கும் பங்குண்டு என்பதையும் ஒப்புக்கொண்டு பங்கு பிரித்துக் கொடுக்கவும் பங்கு பிரித்துக்கொள்ளவும் ஒரு ஆதாரம் ஏற்படுத்திக்கொள்ள இடம் கிடைத்ததே இதுசமயம் நமக்கு ஒரு பெரும் வெற்றியாகும். இது போலவே மற்ற இலாக்காக்களுக்கும்ஒரு விதிஏற்பட்டுவிடுமானால் நமது நாட்டைப் பிடித்த கேட்டில் பெரும் பாகம் தொலைய மார்க்கமேற்பட்டு விட்டதென்றே சொல்லுவோம். இந்த முறைக்கு ஒரு சமயம், அதிகப் பங்குகளுகது பலவழிகளிலும் முயற்சித்து கொள்ளை அடித்து அனுபவித்துவரும் பார்ப்பனர்கள் ஒப்புக்கொண்டாலும், நமது அரசாங்கத்தார் ஒப்புக்கொள்வது என்பது அவர்களுககு மிகவும் கஷ்டமான காரியம் என்பதே நமது அபிப்பிராயம். நமது நாட்டில் வெள்ளைக்கார ஆட்சியானது இந்நாட்டு மக்களின் இவ்வளவு அதிருப்தியின்மீதும் கவலையற்று பொறுத்தமற்ற கொடுங்கோன்மை முறையில் நடைபெற்று வருவதற்கு காரணமே ஒரு வகுப்பை ஒரு வகுப்பார் வைத்து கையில வலுத்தவன் காரியம் என்பதுபோல வலுத்தவன் ஏகபோக உரிமை அடையும் படியான மாதிரியில் அமைக்கப்பட்டிருக்கும் தன்மைதான் என்றே சொல்லுவோம்.

இத்தன்மையே உள் கலகங்களுக்கும் வகுப்புச்சச்சரவுகளுக்கும் ஒற்றுமையின்மைக்கும் இடமாய் இருந்து வருகின்றது. எனவே அவர்களுக்குள்ள இந்த சவுகரியமான தன்மையை மாற்றி விடக்கூடியதும் அடியோடு கவிழ்த்து விடக்கூடியதுமான வகுப்பு உரிமை கொடுத்து விட்டால் எப்படி ஏகபோக உரிமைபோய்விடுமோ அதைபோல் ஏகபோக ஆட்சியும் போய்விடும். ஆகலால் ஏகபோக ஆட்சியை எதிர் பார்க்கும் எந்த அரசாங்கத்தாரும் இந்த வகுப்புவாரி உரிமையை ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். இருந்தாலும் எப்படியோ சாமர்த்தியமாகவோ தந்திரமாகவோ நமது திரு. எஸ். முத்தையா முதலியார் அவர்கள் விதி ஏற்படுத்திக் கொண்டதுபோல் மற்ற மந்திரிகளும நிர்வாக சபை அங்கத்தினர்களும் ஒரு விதி செய்து கொண்டார்களானால், அதிலும் முக்கியமாக திருவாளர்கள் கிருஷ்ணன் நாயர் அவர்களும் மகமது உஸ்மான் அவர்களும் தங்கள் தங்கள் இலாகாவுக்கு திரு முத்தையா முதலியாரைப் பின் பற்றி இம்மாதிரி ஒரு ஏற்பாடு செய்து வைப்பதில் கவலை எடுத்து வெற்றி பெறுவார்களானால் அதுவே அவர்களது உத்தியோககாலத்தை வெற்றி பெற நடத்தியதாகும் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்ளுகின்றோம். அப்படிக்கில்லாமல் 30 நாளை எண்ணிக்கொண்டிருப்பதும் அது எண்ணி முடிந்தவுடன் ரூபாய் 5333—5—4-ஐ எண்ணுவதும் ரூ 5333—5—4-ஐ எண்ணி ஆனவுடன் மறுபடியும் 30 நாட்களை எண்ணுவதும், மீதி ஏதாவது கொஞ்சநஞ்சம் நேரமிருக்கு மானால் தங்கள் அண்ணன் தம்பி, மாமன் மைத்துனன்,சிநேகிதன் அடிமை முதலியவர்களுக்கு உத்தியோகம் வாங்கிக் கொடுப்பதிலும் மறுபடியும் தங்களுக்கு மேல் உத்தியோகங்கள் கிடைப்பதற்கு தந்திரமும்சூழ்ச்சியும் கண்டுபிடித்துக் கொண்டிருப்பதில் செலவழிப்பதுமான காரியத்தை செய்துகொண்டிருந்தால் அவர்களைஎன்னவென்றழைப்பது என்பதை பொதுஜனங்களுக்கே விட்டுவிடுகிறோம்.

இந்தநிலையில் பச்சைப் பார்ப்பனப்பத்திரிகையாகிய "சுதேசமித்திரன்" 8—11—28 தேதி தலையங்கத்தில் "வகுப்புப்பித்தம் தலைக்கேறி விட்டதா?" என்கின்ற தலைப்புக் கொடுத்து தனது ஆக்கிர விஷத்தைக்கக்கியிருக்கிறான்.

அதாவது, ஒடுப்பிலேயே "ஜஸ்டிஸ் கக்ஷியார் மந்திரிகளாக இருந்தகாலத்தில் செய்யத்துணியாத அக்கிரமத்தை.........கனம் எஸ் முத்தையா முதலியார் செய்யத் துணிந்துவிட்டார் "என்றுஆரம்பித்து" இது சட்டவிரோதமான காரியமாகும் என்று முடித்திருக்கிறான.

"மித்திரனின்"ஜாதிப்புத்தி இதுதான் என்பது ஏற்கெனவே எல்லோரும் அறிந்தது தான். என்னவெனில் பார்ப்பனருக்குஇஷ்டமில்லாத எந்தககாரியமானாலும் அதைப் பற்றிஉலகமேமுழுகிப்போய்விட்டதுபோல முதலில்கூப்பாடு போடுவார்கள். அது பலிக்கவில்லையானால் பிறகு சட்டத்தைக்கொண்டுவந்து சட்டம்பேசஆரம்பித்து விடுவார்கள். மனுதர்மசட்டத்தைப்போலவேவெள்ளைக்காரசட்டமும பார்ப்பனர்கள்பிழைப்புக்குத்தக்கபடி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்கின்ற தைரியம் அவர்களுக்கு இருப்பதால் அவர்களுக்கு சட்டம் என்கிற ஆயுதத்

"ரிவோல்ட்."

"ரிவோல்ட்" என்னும் ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்றை சென்ற ஆறாம்தேதி செவ்வாய்க் கிழமை பட்டிவீரன்பட்டி திரு சௌந்திரபாண்டியநாடார் அவர்களைக்கொண்டு திறப்புவிழா நடத்தி 7 ஆம்தேதி புதன் கிழமை முதல்இதழ் வெளிப்படுத்தி விட்டோம். இனி அதை ஆதரித்து அதன் கொள்கைகளை வெற்றிபெறச் செய்ய வைக்கவேண்டியது பொது மக்களின் கடமையாகும்.

"ரிவோல்ட்" பத்திரிகையின் ஆரம்பத்தின் உத்தேசமெல்லாம் நமது நிலைமையையும் கொள்கையையும் தமிழ் மக்கள் தவிர மற்ற மக்களுக்கும் தெரிவிக்கவேண்டும் என்கிற ஆவலேயாகும். நமது நிலைமை சென்னை மாகாணத்திலேயே தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாஷைகளை நாட்டு பாஷையாகக்கொண்ட பல ஜில்லாக்களுக்கே தெரியவில்லையென்றால் வெளி மாகாணங்களுக்கும் வெளிதேசங்களுக்கும் எப்படித் தெரிந்திருக்கமுடியும்? உதாரணமாக ஒரு சமயத்தில் இந்தியா மந்திரியுடன் திரு. டாக்டர் டி. எம். நாயர் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபொழுது 'சென்னை பார்ப்பனரல்லாதார்களுக்காக பெரிய உத்தியோகங்கள் அளிக்கப்படவில்லை' என்று சொன்னபோது "திரு B. N. சர்மா என்பவர் இந்திய அரசாங்கத்தில் நிர்வாக சபைமெம்பராயிருந்து 6500 ரூபாய் சம்பளம் வாங்குகிறாரே, அது போதாதா" என்று இந்தியாமந்திரி சொன்னாராம். அதற்கு திரு டாக்டர் நாயர் அவர்கள் "நான் இந்தியாவைவிட்டு புறப்படும்வரை திரு B N. சர்மா அவர்கள் பார்ப்பனராயிருந்தார், நான் புறப்பட்ட பிறகு அவர் எதாவது பார்ப்பனரல்லாதாராய் விட்டாரோ என்னமோ எனக்கு தெரியவில்லை; ஆதலால் தயவுசெய்து அவர் பார்ப்பனரல்லாதாராக ஆயிருப்பதாய் தங்களுக்கு வந்த செய்தியை காட்டுகிறீர்களா?" என்று கேட்டாராம். அதன்பிறகு அந்த இந்தியா மந்திரி திடுக்கிட்டு "நான் இத்தனை நாளாக அவரை பார்ப்பனரல்லாதார் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன்; இப்போது தாங்கள் சொல்வது எனக்கு ஆச்சரியமாய் இருக்கின்றது" என்று சொன்னாராம்.

அதுபோலவே சென்னையில் சென்ற வருடம் நடந்த காங்கரசுக்கு கல்கத்தாவிலிருந்து வந்த முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. கோஸ்வாமி என்கின்றவரோடு நாம் பேசிக்கொண்டிருந்தபோது "சென்னைமாகாணத்தில் தெருவில் நடக்கக்கூடாதவர்களும், கோவிலுக்குள் போகக்கூடாதவர்களும், தொடக்கூடாதவர்களும், நிழல்மேல் படக்கூடாதவர்களும் இருக்கின்றார்களே, அவர்களைபற்றி தங்கள் அரசியல் திட்டத்தில் என்ன கவலை எடுத்துக் கொண்டிருக்கின்றீர்கள்" என்று கேட்டபோது, அவர் ஆச்சரியப்பட்டு "அப்படி ஒன்று இருப்பதாக எனக்கு இது வரை தெரியவே தெரியாது. இது உண்மையா" என்று பக்கத்தில் இருந்த திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியாரைக் கேட்டார். அதற்கு திரு. ஷண்முகம் செட்டியாரவர்கள் சிரித்துக் கொண்டே "இதற்குசாக்ஷிக்காக அதிக தூரம் போகாதீர்கள். நானே சில கோவிலுக்குள் போகக்கூடாத ஜாதி என்பதைச் சேர்ந்தவன். ஹைகோர்ட்டு வரையில் வியாஜ்ஜியம் செய்து பார்த்தும் எங்களை அந்த கோவிலுக்குள் போகக்கூடாத ஜாதியிலேயே சேர்த்து தீர்ப்பு பெற்றுவிட்டார்கள். எனவே இனி உங்களுக்கு ஏதாவது சந்தேகமுண்டா" என்று கேட்டார். பிறகு திரு. கோஸ்வாமி பட்ட ஆச்சரியத்திற்கு அளவே இல்லை.

இது போலவே பல உதாரணங்கள் எடுத்துக் காட்டலாம். எனவே நம் நிலைமையையும் தேவையையும் வெளிநாட்டார்களுக்கு உள்ளங்கைநெல்லிக்கனிபோல் தெரியப்படுத்த வேண்டுமானால் தாக்ஷண்யமும் பயமும் சுயநலமுமற்ற தன்மையில் தைரியமாய் வெளிப்படுத்தக்கூடிய ஒரு சாதனம் இருந்தாக வேண்டும் என்ற கருத்தைக் கொண்டே "ரிவோல்ட்"டை ஆரம்பித்து விட்டோம். அதன் கொள்கையைப்பற்றி நாம் அதிகமாக சொல்லிக் கொள்ள வேண்டியதில்லை என்றே நினைக்கின்றோம்.

முக்கியமாக அரசியல் துறையில் உழைக்க வேண்டும் என்பது அதன் கவலையல்ல. ஆனால் அரசியல் அயோக்கியத்தனங்களை தைரியமாயும் தாராளமாயும் வெளியாக்கி விட வேண்டும் என்பதே "ரிவோல்ட்"டின் பெருங்கவலைகளில் ஒன்றாகும். அதுபோலவே சாமியைப்பற்றியும்சமயத்தைப் பற்றியும் அதற்குசிறிதும்கவலையில்லை. ஆனால்அவற்றின் பேரால் நடைபெறும் அயோக்கியத்தனங்களையும் கொடுமைகளையும் அடிமைத்தனமைகளையும் அறியாமையையும்வெளியாக்குவது எல்லாவற்றையும்விட முக்கியமானதாகும். சுருக்கமாகவும்மொத்தமாகவும்கூறுமிடத்து இதற்குமுன் ஒருதடவை அதாவது, "ரிவோல்ட்" பத்திரிகையை அரசாங்கத்தாரிடம் பதிவு செய்து கொண்ட சமயத்தில், அதன் கொள்கை என்ன என்பதாக அரசாங்கத்தார் அறிய விரும்பிய போது தெரிவிக்கப் பட்டதையே மறுமுறையும் தெரிவித்து இதை முடித்து விடுகின்றோம். அதாவது. —

"ரிவோல்ட்' என்ற ஆங்கில வாரப்பத்திரிகை நடத்துவதின் கருத்து, இப்போது நாம்பதிப்பாசிரியராயிருந்து நடத்தும் "குடி அரசு" என்னும் தமிழ்வாரப்பத்திரிகையின் கொள்கைகளையே முக்கியமாய்க்கொண்டு நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 'ரிவோல்ட்' என்கின்ற வார்த்தைக்கு நாம் எடுத்துக்கொண்ட அர்த்தம் கட்டுப்பாட்டை உடைத்தல் என்பது. அதாவது மனிததர்மத்துக்கும், மனிதஇயற்கைக்கும் விரோதமாக 'அரசியலினாலும் சரி, மத இயலினாலும் சரி, அதிகார இயலினாலும் சரி, முதலாளி இயலினாலும் சரி, ஆண் இயலினாலும் சரி, மற்றும் எவைகளினாலும் சரி; அவைகளினால் ஏற்படும் இயற்கைக்கும் அறிவுக்கும் மாறுபட்ட கட்டுபாடுகளை உடைத்து, உலகமும் அதன் இன்பமும் எல்லோருக்கும் பொது என்பதும்; மக்கள் யாவரும் சமம் என்பதுமான கொள்கையை மனசாக்ஷிப்படி சாத்தியமான வழிகளில் பிரசாரம் செய்வதே அதன் நோக்கம்" என்பதாகும்.

இதற்கு முக்கிய பத்திராதிபராக திரு எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல். அவர்கள் இருந்து வருவார். நாமும் அதில் பங்குஎடுத்து வருவோம். எனவே இதை வாலிப உலகம் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம். நம் வாலிப நண்பர்கள் ஆங்காங்குள்ளவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் சந்தாதாரராய்ச் சேருவதுடன் ஒவ்வொருவரும் இது சமயம் மூன்றுசந்தாதார்களுக்கு குறையாமல் சேர்த்து விட்டு மறுகாரியம் பார்ப்பது என்கின்ற உறுதியைக் கொள்ள வேண்டுகின்றோம்.

சந்தா விபரம்

வருட சந்தா	ரூ	4—0—0
மாணாக்கர்களுக்கு	,,	3—0—0
வெளிநாட்டிற்கு	,,	5—0—0

மாதிரி காப்பி வேண்டியவர்கள் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

விலாசம்

மேனேஜர் "ரிவோல்ட்"

ஈரோடு.

தைக்கொண்டு எப்படியும் பேசலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இனி இந்த நினைப்புக்கு இடம் கொடுக்கக்கூடாது. நாம் நியாயத்திற்கு விரோதமாய் இருக்கும்எந்த சட்டத்தையும்மண்டையில் அடித்துஉடைத்துசுட்டுப்பொசுக்கதயாராயிருக்கவேண்டும்.

"மித்திரன்" ஜஸ்டிஸ்கக்ஷியை புகழ்ந்ததற்கும் ஆதாரம் இல்லாமல் போகவில்லை. எனெனில்சென்றதேர்தலில்பார்ப்பனர்களின்விஷமப்பிரசாரத்தால் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு நல்ல சூடு கிடைத்துவிட்டதால் இந்தத் தேர்தலிலும் அப்படி ஏற்பட்டு விடுமோ என்கின்ற பயத்தில் சூடுபட்டவர்கள் பார்ப்பனர்களுக்கு நல்லபிள்ளை ஆகலாம் என நினைத்து குட்டிக்கரணம் அடித்து வருகின்றார்கள். இதன் பலன்களில் ஒன்றுதான் திரு ராமசாமி முதலியாரவர்கள் தலை ஒருவருக்கும் வால் ஒருவருக்கும் காட்டுவது. இதன் பலன் தான் திரு பாத்ரோ அவர்கள் சமூக சீர்திருத்தத்திற்கு சட்டம் செய்யக் கூடாது என்றது. இதன் பலன்தான் இப்பேர்ப்பட்ட திரு பாத்ரோ அவர்களைபனகால்அரசர் சைமன் கமிட்டி மெம்பராக்கினதும் அவரை அக்கமிட்டிக்குத்தலைவராக்கினதும்ஆகும். இதன்பலன் தான் தொழிலாளர்கள்கொடுமைப் படுத்தப்பட்ட விஷயத்தில் சற்றும்கவலைகொள்ளாமல்தங்கள் ஆதிக்கத்தின் பெருமையில் அலட்சியமாயிருந்ததும் இன்னும் இதுபோன்றபலஇரகசியங்களும் ஆகும்- எனவே இதன் சக்தியில் இன்னும் நடப்பதைப்பார்க்கலாம் என்று தான் காத்திருக்கிறோம்- எது எப்படியானாலும், 'மித்திரன்' ஜாதி என்ன சொன்னாலும், ஜஸ்டிஸ்கக்ஷி எப்படி அந்தர் அடித்தாலும், நமது மக்கள் தைரியத்தை விடாமல் அதிகாரத்திலும் பதவியிலும் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் நமது வீரர் முத்தையா முதலியார் அவர்களை பின்பற்றவேண்டுமென்பதே நமது வேண்டுகோளாகும்-

நமது குழந்தைகள் பார்ப்பன உபாத்தியாயர்களால் படும் கஷ்டம்.

"திராவிடன்" பத்திரிகை 26—10—28ல் தலையங்கத்தில் எழுதுவதாவது,—

"நம்மாகாணத்தில் பார்ப்பன ஆசிரியர்களின் கொடுமையால் பார்ப்பனால்லாத மாணவர்கள் படுந்துயரை என்னவென்று எடுத்துரைப்பது? பார்ப்பன ஆசிரியர்கள் பார்ப்பனரல்லாத மாணவர்களை வகுப்புகளில் சரியாய் நடத்துவது கிடையாது; பாடஞ் செவ்வனே சொல்லிக் கொடுப்பதும் கிடையாது. ஒரு மாணவன் "குடி அரசு" படிக்கின்றவனாகவோ, அன்றி "திராவிடன்" படிக்கின்றவனாகவோ, அல்லது "ஜஸ்டிஸ்" படிக்கின்றவனாகவோ, இருந்துவிட்டால் அவன் படும் திண்டாட்டந்தான். அதுவும் இராமசாமி நாயக்கர் பிரசங்கத்துக்குப் போய்விட்டால் இன்னும் திண்டாட்டம். அவன் எவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தபோதிலும், அவனைப் பரீக்ஷையில் மொட்டையடித்து விடுவார்கள். இத்தகைய கொடும் நிகழ்ச்சிகள் இம்மாகாணத்தில் பல இடங்களில் நேர்ந்துள்ளன வென்பதை நாம் அறிவோம். இன்று லால்குடி போர்டு ஹைஸ்கூலில், அப்பள்ளிக்கூடத்துப் பார்ப்பன ஆசிரியர்களால், பார்ப்பனரல்லாத மாணவர்கள் எவ்வளவு கொடுமையாக நடத்தப் படுகின்றார்கள் என்பதை ஒரு கமிட்டியார் விசாரணை செய்வார்களாயின் திரு. நாவேல் அவர்கள் சைமன் கமிஷன் முன்பு கூறியது உண்மை என்பது புலனாகிவிடும்."

இந்த வாக்கியங்களை நாமும் முழுமனதோடு ஆதரிக்கக் கடமைபட்டிருக்கின்றோம். ஏனெனில் நாமும் லால்குடிக்கும் அதுபோன்ற பல ஊர்களுக்கும் சென்றிருந்த காலையில் பார்ப்பனரல்லாத மாணவர்கள் அவ்வப் பாடசாலையில் பார்ப்பன உபாத்தியாயர்களால்படும் துன்பங்களை கேட்டதில் நமது நெஞ்சமும் குமுறுகிறது.

லால்குடி பள்ளிக்கூடத்தின் கொடுமைக்கு ஒருசிறு உதாரணம் மாத்திரம் கூறி மேலே சொல்லுவோம். அதாவது லால்குடி பள்ளிக்கூடத்தைச்சேர்ந்த வாசக சாலைக்கு 'இந்து' 'சுதேச மித்திரன்' முதலிய பார்ப்பனபத்திரிகைகள் போர்டார் செலவில் வரவழைக்கப்படுகின்றன. 'திராவிடன்' 'ஜஸ்டிஸ்' பத்திரிகையும் வரவழைக்க வேண்டுமென்று நூற்றுக்கணக்கான மாணவர்கள் கையொப்பமிட்டு தலைவர்களுக்கு அனுப்பியும் பல வேண்டுகோள்கள்பல மாதக்கணக்காகியும் மதிக்கப்படாமலிருப்பதோடு சுயமரியாதையில் பற்றுள்ள மாணவர்கள் உபாத்தியாயர்களால் வெறுக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே ஜில்லா தாலுக்கா போர்டு தலைவர்களும் முனிசிபல் தலைவர்களும் தாங்களும் தங்கள் மக்களும் தலைவர்கள் பதவியை அனுபவிப்பதற்குமாத்திரம் அந்தஸ்தா பனங்கள் இருக்கின்றதாகக் கருதி அதற்கேற்ற காரியங்களுக்கே தங்கள் முழுநேரத்தையும் அறிந்துசெலவழிக்காமல்சத்தியத்திற்கும் நாணயத்திற்கும் ஒரு சிறிது பாகத்தையாவது செலவிடும்படி வேண்டுகின்றோம்

திரு. எ. ராமசாமி முதலியாரின் அறிக்கை.

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப்பற்றி நாம்பத்திரிகைகளுக்கு அனுப்பிய சேதிக்குச்சென்றவாரக் 'குடி அரசு,' 'திராவிடன்' கட்டுரைகளுக்கும் திரு எ. இராமசாமி முதலியாரவர்கள் பதில் அளித்திருப்பதாவது.

"நான் தனித்தொகுதி சம்மந்தமாகவெளியிட்ட அறிக்கையைப்பற்றி எனது மதிப்பிற்குரிய நண்பரும் தலைவருமான திரு. ராமசாமி நாயக்கரின் அபிப்பிராயத்தை நான்படித்துப்பார்த்தேன்.

நான் வெளிப்படுத்திய அபிப்பிராயம்என் சொந்த அபிப்பிராயம் என்று நான் அசோசியேட் பிரஸ் நிருபரிடம் சொல்லியிருந்தும் அதை அது வெளிப்படுத்தாததற்கு காரணம் இன்னது என்பதுஎனக்கு தெரியவில்லை.

தற்கால நிலைமையில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஆகிய இரண்டு சமூகங்களுக்கும் உள்ள பலமான மனக்கசப்பானது தனித்தொகுதி ஏற்படுத்துவதன் பயனைப் ஒரு அளவுக்கு பாழாக்கப்பசிக்கக்கூடியதாகவும சமநிலைமை உண்டாக்கத்தக்கதாகவும் இருக்குமென்று சொல்லியிருந்தேன்.

ஆனாலும் இந்தசமயத்தில் அதை வற்புறுத்துவது பார்ப்பனால்லாதார் நன்மைக்கு அனுகூலமானதல்ல என்று நம்புகின்றேன். ஏனெனில் மேல்கண்ட தனித்தொகுதித்தேர்தல் முறை ஏற்பட்டால் இனி ஏற்படப்போகும் பார்ப்பனர்கள் எவ்வளவு அடையக்கூடுமோ அதைவிடவும் அவர்கள் எத்தனை ஸ்தானங்களுக்கு உரியவர்களோ அத்தனை ஸ்தானங்களைவிட அதிகமாகவும் அடைந்துவிடக் கூடுமென பயப்படுகின்றேன்.

இந்த காரணங்களாலேயே நாம் தனித்தொகுதித்தேர்தல்முறைகேட்பதானது பார்ப்பனர்களுக்குக்கூட அனுகூல மானதும் ஆசையுள்ளதுமாக இருக்குமென்றே நான் கருதுகிறேன்.

நான் பம்பாய் மாகாணத்தின் நிலைமையை நன்குதெரிந்தபிறகுதான் இதைச்சொல்ல முன்வந்தேன் என்பதை எனது நண்பர்கள் அறியவேண்டும்.

இந்தமாதிரி நான் சொல்வதற்கு எனக்கு தைரியமேற்பட்டதற்கு காரணம் என்னவென்றால், திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் செய்துவருகின்ற அபாரமான வேலையின் பயனாய் ஏற்படப்போகும் பலனில் எனக்கு ஏற்பட்ட உறுதியான நம்பிக்கையேதான்.

எப்படி யிருந்தபோதிலும் நான் எனது தலைவர்களுடைய அபிப்பிராயப்படி நடக்க எப்போதும் தயாராயிருக்கிறேன். மற்றபடி உத்தியோக சம்மந்தமாக வகுப்புவாரி பிரதிநிதித்துவ விஷயத்தில் என்னுடைய அபிப்பிராயங்கள் எல்லாருக்கும் தெரிந்ததாகும். அதிலிருந்து நான் ஒருசிறிதும் மாற்றமடையவில்லை.

பம்பாயைப் பொருத்தவரையில் நான் கவலைப்படுவது நல்ல விஷயங்களை சரியானபடி எடுத்துச்சொல்லாததால் கெட்டுப் போய் விடுகிறதே என்பதுதான்"

என்பதாக தமது பதிலில் தெரிவித்திருக்கின்றார். இதைப்பற்றியநமது அபிப்பிராயத்தை பின்னால் வெளிப்படுத்தலாம் என்பதாக எண்ணியுள்ளோம்.

அரசாங்க உத்திரவு.

தொழிலாளர்களுக்கு வண்டி.

சென்னை அரசாங்கத்தலைமை காரியஸ்தரான திரு. H. G. Stokes ஸ்டோக்ஸ் துரை C. S. I., C. I. E., I. C. S., அவர்களிடமிருந்து சென்னை சட்டசபை அங்கத்தினரும் ஜில்லா போர்டு தலைவருமான ராவ் பகதூர் C. S. இரத்தினசபாபதி முதலியாரவர்களுக்கு.

ஐயா, தென் இந்திய ரயில்வே வேலை நிறுத்த சம்மந்தமான வழக்குகளில் உள்ள எதிரிகள் போலீசாரால் கடுமையாக நடத்தப்படுவதாக தாங்கள் நிர்வாக சபை அங்கத்தினருக்கு 11—10—28ல் எழுதிய கடிதம் கிடைத்தது. அதன்பேரில் அரசாங்கத்தார் அடியில்கண்டவிதமான உத்திரவை பிறப்பித்திருப்பதாக தங்களுக்கு தெரிவிக்கவேண்டியவனாயிருக்கிறேன்.

அதாவது:—

குற்றவாளிகளாக கருதப்பட்ட எதிரிகளுக்கு விசாரணைக்கு போகவும் வரவும் மோட்டார்பஸ்வண்டிவைத்துகூட்டிக்கொண்டுபோகும்படி உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.

தங்கள் கீழ்படிதலுள்ள,

(Sd.) H. G. ஸ்டோக்ஸ்.

காலஞ் சென்றார்

கோம்பை பிரமுகர்களில்ஒருவரும், ஸ்ரீதிருமலைராயப்பெருமாள் சுவாமி தேவஸ்தான கமிட்டி யூனியன் போர்டு மெம்பரும், திருவாங்கூர் ஏலவிவசாயிகளின் கோம்பை கிளைச்சங்கத்தின் வைஸ்பிரசிடெண்டும், தேனி ஆரிய வைஸ்ய தர்மச்சத்திரத்தின் தர்மகர்த்தாக்களுள் ஒருவரும், தர்மப்பள்ளிக்கூடத்திபரும் பொதுஜனநண்பருமான ஸ்ரீமான் வ. ஸ்ரீராமன் செட்டியாரவர்கள் ஒருவாரமாக சுகக்குறைவாக இருந்து 31-10-28தேதி புதன்கிழமை இராத்திரி 9 மணிக்கு இவ்வுலக வாழ்வை நீத்தார். அன்னவரின் ஜடலம் ஆயிரக்கணக்கான பொதுஜனங்களுக்கிடையே கொண்டுபோய் தகனம் செய்யப்பட்டது. பெரியாரின் குடும்பத்தாருக்கு அநுதாபம் காட்டுவதற்கறிகுறியாக அன்று கடைகள் பூராவும் மூடப்பட்டன. மு. அ. மு

பார்ப்பனீயம் ஒழிந்த சடங்குகள்

சாத்தூர்தாலூகா வடமலைகுரிச்சி திரு. சின்னசாமிரெட்டியார் மகன் திரு நாராயண ரெட்டியாருக்கும் அருப்புக்கோட்டை தாலூகா சிதம்பரபுரம் நாராயணரெட்டியார் மகள் ஸ்ரீமதி ஆவுடையம்மாளுக்கும் ஷை தாலூகா வெள்ளையாபுரத்தில் 31-10-28ல் திரு சு. வெ. சிங்கமரெட்டியார் வீட்டில் பார்ப்பன புரோகிதப்பெருச்சாளிகளை அறவே ஒழித்து ந. வெங்கடராமரெட்டியாரும் மு. ந. வெங்கிட்டசாமிரெட்டியாரும் இன்னும் மற்றான் சகோதரர்களும் கூடவே இருந்து சுயமரியாதையுடன் திருமணத்தை வெகுவிமரிசையாய் நடத்தினார்கள். குருசாமிரெட்டி

அருப்புக்கோட்டை தாலூகா வெள்ளையாபுரம் கிராமத்திலிருக்கும் திரு ந. கு. சி நாராயணரெட்டியார், பிணம் பிடுங்கும் கழுகுபோல் பொருள்பறிக்கும் பார்ப்பன புரோகிதரை ஒழித்து சுயமரியாதையுடன் புது வீடு புகுந்து சில சகோதரர்களுக்கு அன்னமளித்தார். J. S. K. குருசாமிரெட்டியார்.

பாளையங்கோட்டையில் 1104ஆண்டு விபவ வருஷம் ஐப்பசி மாதம் 8 தேதி யாகிய புதன் கிழமை உடன்குடி திருவாளர் த முத்துசாமி பண்டிதரவர்கள் குமாரர் திரு பிச்சையா பண்டிதருக்கு பாளையங்கோட்டை திரு. உ. த. பாக்கியம் பண்டிதர் கிருகத்தில் சுயமரியாதை முறையில் அனவரதநல்லூர் எஸ் இராமசாமி பண்டிதர் அவர்களால் திருமணம் சிறப்பாக நடத்தப்பட்டது.

தென்காசிதாலூகா இடைகால்கிராமத்திலிருக்கும் திருவாளர் எ. இராமலிங்கமுதலியார் அவர்களின் சேவகன் திருவாளர் எ. ஆர் சுப்பையா முதலியாருக்கும் அம்பாசமுத்திரம் தாலூகா பிரமதேசத்திலிருக்கும் திருவாளர் டி. எஸ். திருமலையப்பமுதலியார் அவர்களின் பேத்தி கலியாணி அம்மாளுக்கும் நிகழும் ஐப்பசி மாதம் 15 தேதி பார்ப்பனபுரோகிதத்தை அறவே ஒழித்து சிறப்பாக திருமணம் நடந்தன. அக்கினசத்திர பந்துக்களுக்கும் ஏழைகளுக்கும் விருந்து அளிக்கப்பட்டன.

கும்பகோணத்தைசேர்ந்த சாக்கோட்டை சுயமரியாதை வீரரும் லோக்கல்பண்டு மெம்பருமான ஸ்ரீமான் ரெ. சவுரிராஜலு நாயுடு சம்சாரம் ஜெகலெட்சுமி அம்மாள் 19-10-28-தேதி காலஞ்சென்றதை முன்னிட்டு 11-நாள் காரியங்களை 29-10-28 தேதி பார்ப்பன புரோகிதமின்றி நடத்தியது உறவினர்களுக்கும் யேழைகளுக்கும் அன்னம் படைத்து இனிது முடித்தார்.

கும்பகோணத்தை சேர்ந்த பம்பைபடையூர் ஸ்ரீமான் பாலகிருஷ்ண பிள்ளை தமது தாயாருக்கு சுமார் 12 வருஷமாய் திவசை கொண்டு நடத்திவந்த திதியைசென்ற 27-10-28-ல் புரோகிதனை அறவே ஒழித்து உறவினர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னம் படைத்து சுயமரியாதை உடையவன்றுமாய் உபன்யாசமும் செய்வித்தார்

வே. கணபதிநாயக்கர்

விதவைப்பெண் தேவை

இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டை தாலூகா பெருஞ்சாளி புதுப்பட்டி கிராமம் சுயமரியாதைச் சங்கக் காரியதரிசியும் ஷையூர் சுயமரியாதை எலிமெண்டரி இராப்பாடசாலை உபாத்தியாயருமான பு. செ. ஆ. ராமசாமியாகிய நான் ரெட்டிகுலத்தில் பிறந்த தக்ககல்வியும் அந்தஸ்துமுள்ள பால்ய விதவை கிடைத்தால் விவாகம் செய்துகொள்ளச் சம்மதிக்கிறேன். திருமணம் சுயமரியாதைத் திருமணமாக நடைபெறும்.

அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும்பெற்ற நல்ல மருந்துகள்.

[ரூ. 1-8-0] அமிர்தாஸம். (Rs. 1-8-0)

சகல நோய்களுக்கும் கைகண்ட ஔஷதம்.

இந்த ரசம் வினைய ரசங்களுக்கு ராஜாவாயும், சகலத்திலும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தாசம் தான். அரிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தாசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.

நீர்க்கட்டால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள்; வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி உள்ளுடன் கிரமமாய்மலப்பிரவர்த்திசெய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும்.

24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்தமாத்திரை உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்யப்பட்டது. உடைந்த தாதை கட்டி, நீடித்த போகசக்தியையும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0. 50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0. வி. பி. வேறு.

சகல மருந்துகளின் விபரமும், நோய்களின் தன்மையும், சாப்பிடும் முறை, பத்தியம், ஸ்நானபான அநுபானம் முதலியவைகளும், குணமானவர்களிற் பலரின் உயர்ந்த நற்சாக்ஷி பத்திரங்களும் அச்சிடப்பட்ட நமது பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

நமது வெளியூர் சோல் ஏஜண்டுகள்

1. பர்மாவிற்கு:— மு. ச. வடிவேல பிள்ளை, கார்த்திகதர் கிளப், மொகல் வீதி, ரங்கூன்.
2. தஞ்சைக்கு.— எம். கல்யாணசுந்தர முதலியார், கதர் ஸ்டோர், கடைத்தெரு: மாயவரம்.
3. திருச்சிக்கு—: பி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை, புகையிலை மண்டி, 54 தஞ்சை ரோடு, திருச்சி.
4. மதுரைக்கு:— வி. முத்துராமலிங்கம் பிள்ளை, கோவில்தெரு, திண்டுக்கல்.
5. தென் ஆற்காட்டிற்கு:—வி. கே. எஸ். அய்யர். & கம்பெனி, சிவபுரி புகையிலை வியாபாரம், கீழ வீதி, சிதம்பரம்.

இதர வெளியூர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

தண்டபாணி வைத்தியசாலை,
294, சைனபஜார், மதராஸ்.

ஆரோக்கிய லேகியம்.

மலபந்தமே அநேக வியாதிகளுக்கு மூலகாரணம் தினமும் மலப்பிரவர்த்தி சரியாய் ஆகிவிட்டால் அநேக வியாதிகள் வாரா. இந்த லேகியத்தில் சுழற்சிக்காய் அளவு இரவில் படுக்கைக்கு போகுமுன் சாப்பிட்டால் காலையில் சுகமாய் மலப்பிரவர்த்தி ஆகும்.

ஒரு சேர் டப்பி ஒன்றுக்கு விலை ரூபாய் 2—0—0
அரைச்சேர் டப்பி ஒன்றுக்கு விலை ,, 1—0—0

பண்டிட், சி. வ. ஞான சம்பந்தம்,
ஸ்ரீ சங்கராமிர்த இராஜ வைத்தியசாலை, சீகாழி. S. I. R.

revolt

Edited by E. V. Ramasami & S. Ramanathan, M. A., B. L.

The Policy of the paper will be the policy of "Kudi Arasu."

PUBLISHED EVERY WEDNESDAY.

Annual Subscription:—

INLAND	Rs. 4
„ FOR STUDENTS	Rs. 3
FOREIGN	Sh. 8, $ 2, Rs. 5,

Send Your Subscription in advance.

Apply to:— The Manager, "REVOLT" Erode.

"ரிவோல்ட்"

"குடி அரசி"ன் கொள்கையைக்கொண்டு புதன்கிழமைதோறும் வெளிவருகிறது.

நாம் சுமார் 3, 4, மாதங்களுக்குமுன் தெரிவித்துக்கொண்டபடி "ரிவோல்ட்" என்னும் ஆங்கில வாரப்பத்திரிகையின் முதல் இதழ் இம்மாதம் 7-ஆம் தேதியாகிய புதன்கிழமையன்றே வெளி வந்துவிட்டது. உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்.

ஆசிரியர்கள்:— ஈ. வெ. இராமசாமி,
S. இராமநாதன், M. A., B. L.

சந்தா விபரம்.

வருட சந்தா	ரூ. 4—0—0
மாணவர்களுக்கு	ரூ. 3—0—0
வெளி நாட்டிற்கு	ரூ. 5—0—0

முன் பணம் அனுப்பவேண்டும்.

விலாசம்:— மானேஜர், "ரிவோல்ட்" ஈரோடு.

4 ம் பக்கத் தொடர்ச்சி.

…வன் இறந்தவுடன் அப்பெண் உலகவாழ்க்கையை முற்றுந்துறந்து, சுவர்க்கமென்று சொல்லப்படுகிற இடத்திற்குப்போய்ச்சேரவேண்டிய பாரமார்த்திக வழிக்கென ஐம்புலனையும் அடக்கி உற்றார் உறவினர், பெற்றோர் பிள்ளைகள்முதலியவர்களால் இழிவாய் கருதப்பட்டு இறக்கும்வரையில் பாழும் வயிற்றைக் கழுவவேண்டியவர்களாக விருக்கின்றனர் 12, 14, வயதில் விதவையான தன் பெண்ணையோ சகோதரியையோ மூலையிலிடத்திவிட்டு அவளைப்பற்றிய கவலை ஒருசிறிதுமின்றி 50, 60 வயதுடைய தந்தையும், தமையனும் 12, 14 வயதுடைய சிறுமிகளை மணம்புரிந்து அதே இல்லத்தில் இன்பவாழ்வு நடத்தும் கொடுமைக்கு கண்ணீருகுக்கவேண்டாமா? ஆண்கள்மட்டும் கட்டற்ற காளைகளாகவும், பெண்கள் உணர்வற்ற கட்டைகளாகவும் உலகிடைவாழ்க்கை நடத்தவேண்டுமென வற்புறுத்தும் இந்துமத நியதியையென்னென்றியம்புவது!

அன்றியும், நம் சகோதரிகளைக் (விதவைகளை) கொடுமைப்படுத்த மதச்சட்டமேதேனு முண்டாவென்றால் அதுவுமில்லை என்பதை கீழ்க்காணும் காந்தியடிகளின் புனிதமொழிகள் அறிவுறுத்துகின்றன. "மிகச் சிறுவயதுள்ள பெண்களை ஆயுள் முழுதும் விதவைகளாக வீட்டில் அடைத்திருப்பதைப்போல் கொடுஞ்செயல் வேறொன்றுமில்லை. விதவைகளுக்கு மறுவிவாகம் செய்யக்கூடாதென ஒருசாஸ்திரமும் கூறவில்லை, விதவைகளைப் பல வித நிபந்தனைக்குட்படுத்துவதால் அவர்களுடைய வாழ்வு பயனற்றதாய்ப் போவதோடு இந்துமதமும் இந்து சமூகமும்பாழாய்ப்போகின்றன். அறுபது வயதிற்கு மேற்பட்ட வயோதிகர்கூட சிறு பெண்களை போட்டிபோட்டு அதிக விலைகொடுத்து அவர்களை மணம் செய்துகொள்ளுவதை விட மானக்கேடானசெய்கை வேறொன்றுமில்லை"

இன்னும் இவைபோன்ற எடுத்துக்காட்டுகள் பலவுள. வாய் [illegible]த்தில் வல்லவர்களெனப் பெயர் படைத்தோம் மேடைகளில் வீசும் வீச்சுக்கு அளவில்லை, நிறைவேற்றும் தீர்மானங்களுக்கும் எல்லையில்லை- பேச்சளவில் காலம் கழிப்பதில் பயனில்லை. விதவைகளின் துயரை முற்றுமகற்றி [illegible] [illegible] முன்னேற்றமடைய இயலாது. பழக்க வழக்கமென்று சமூகத்தைப் பாழாக்கிவரும் [illegible] விசாலமற்ற கிணற்றுத் தவளைகள் என்பதை இத்[illegible] [illegible] [illegible] அவர்களால் [illegible] [illegible] கிட்டாது. ஆதலால் தேசிய, சமூக [illegible] [illegible] இளைஞர்களே! இக்கொடுமையை அகற்ற முற்படவேண்டும், [illegible] ஆண்கள், கணவனையிழந்த பெண்களையே அவர்களின் சம்மதம் பெற்று மணம் செய்து கொள்ள வேண்டுமெனவும், விதவைகள் கிடைக்காவிட்டால் கன்னிகைகளை மணந்துகொள்ளலாமென்றும், மணமாகாத இளைஞர்கள் கன்னிகைகளையோ விதவைகளையோ அவரவர் விருப்பப்படி மணம்புரிந்து கொள்ளலாமென்றும் விதிகள் வியாபித்தல் வேணும். இந் நன்முயற்சிக்கு எவ்வித இடையூறுகள் நிகழினும் அவைகளைப் பொருட்படுத்தாது துணிவுடன் விதவா விவாகத்தை நடைமுறையில் நடத்திவைக்க முன்வரும்படிக்கு ஒவ்வொரு சகோதர சகோதரிகளுக்கும் விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம். இவ்விதமான விதவா விவாகங்களை நடத்த முற்படும் இளைஞர்களுக்குளங்களாலியன்ற பொருளுதவி செய்கின்றோமென இதனால் வாக்களிப்பதுடன் [illegible] விதவை நாடுவோர் என். ராமசாமி 25. டெலுக்ஐயர் தெரு, சிங்கப்பூர், என்ற விலாசத்திற்கு கடிதங்கள் எழுதிக் கொள்ளும்படி [illegible] கொள்ளுகின்றோம்.

இப்படிக்குத் தங்கள் சகோதரர்கள்.

எஸ் ராமசாமி	வி வெங்கட்டருயலு
வி டி சங்கர லிங்கம்	ஆர் டி கோவிந்தசாமி
எஸ் கோபால்	ஜி ரெத்தின சபாபதி
பி. மாடசாமி	ஆர் முத்துகிருஷ்ணன்
ஆர் சுந்தர ராஜுலு	வி என் நாராயணசாமி
பி பெருமாள்	எ சி சுப்பையா
கே தாமோதரன்	கே வெங்கடாசலபதி
எம் நல்லசிவம்	ஆர் புருஷோத்தமன்
வி சீனிவாசலு	ஜி சாரங்கபாணி

சிங்கப்பூர்-

80 வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற

அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.

காரம், மணம், நிறம், வாடை, குணம் அமைந்துள்ளது எங்கள் உலகடிரேட்மார்க் பார்த்துவாங்குங்கள்

(V. 120) ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

ஜமீன்தாரர்களாலும், டாக்டர்கள், கலெக்டர்கள், ஜட்ஜிகள் மிட்டாதாரர்கள், வக்கீல்கள், தேசபக்தர்கள் தொண்டர்கள், வியாபாரிகள் முதலிய எல்லோர்களாலும் நன்கு மதிக்கப்பட்டு அநேக நற்சாட்சிப் பத்திரங்களும் தங்க பதக்கங்களும் பரிசுபெற்ற

சர்வரோக சஞ்சீவி.

புட்டி 1-க்கு விலை ரூ. 2. தபாற் கூலி வேறு.

இது மக்களுக்கு சிறந்த ஓர் குடும்ப ஔஷதம். இதன் பூர்வ சக்தியைப் பரீக்ஷித்துப் பாருங்கள். சகல வியாதிகளையும் வெகு சீக்கிரத்தில் நிவர்த்திக்கும் சக்தி உடையது. இந்த சஞ்சீவியை சிறுவர்கள முதல் ஆண், பெண் முதலிய எல்லோரும் உள்ளுக்கும், வெளிக்கும் உபயோகப்படுத்தலாம். ஒவ்வொரு குடும்பங்களிலும் ஓர் புட்டி அவசியம் இருக்கவேண்டியது. பத்தியம் பாஷாண வகைகள் கிடையாது.

திரும் வியாதிகள்:— ஜுரங்கள், ஜலிப்பு, மார்சளி, இருமல், தொண்டைக்கம்மல், தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டைகுத்தல், மார்வலி, பல்வலி, இடுப்புவலி, பக்கவலி, விரைவாதம், மேகருக்க, பிடிப்பு பார்சவாய்வு, இளைப்பு, ஜன்னி, சயித்தியம், வயிற்றுவலி, வயிற்றுல் போவது, இரைச்சல், அஜீர்ணம், வயிறுமப்பு, பசியில்லாமை, பித்தமபக்கம், காசம், க்ஷயம், குன்மம், கை கால் குடைச்சல், செவிநோய், முறை ஜுரம், பிளேக் கட்டிகள், விஷபேதி, சுகஜன்னி சூதகவயிற்றுவலி, குழந்தைகளுக்கு ஏங்கல், வலிப்பு, கக்குவான். மாந்தம், வெட்டுக் காயங்கள், பாம்பு, தேள், நாய், எலி, முதலிய விஷக கடிகள், வீக்கம், சொறி, சிரங்கு, அரிப்பு, தடிப்பு, சேத்துப் புண், முதலிய சகல வியாதிகளையும், கண்டிக்கும். கப்பல பிரயாணத்தினால் பிரயாணிகளுக்கு ஏற்படும் வாந்தி, மயக்கம், முதலிய உபாதைகளைக் கண்டிக்கத்தக்கது. டிராமா நடிகர்கள், உபந்யாசகர்கள் முதலியவர்களுக்கு தொண்டையை சுத்தம் செய்வதில் அதிக வல்லமை யுடையது. பினாங்கு, சிங்கப்பூர், தைப்பிங் F. M. S. முதலிய வெளி நாட்டார் முன் பணம் அனுப்ப வேண்டும்.

ராஜ வைத்திய ஆஸ்ரமம்,
செவ்வாய்பேட், சேலம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிர்கள். பாப்பாரப்பெண்கள் சுமங்கிலி பூசைக்கு சீலை ரவிக்கையும் கொடுக்கப்பட்டதாம். சாஸ்வதிக்கும் சந்நியாசிக்கும் ஜாதியிருக்க நியாயமில்லை. பூசைசெய்தவர் வேதாந்த மதக்குரு. பணம் சைவனுடையது. கேள்விகேட்டு இதை ஞாயமென்று நிரூபிப்பவன் சுதேசமித்திரன் நிருபர். பதில்சொல்லுகிறவன்பிரசன்னபௌத்தன் என்று மற்ற மதஸ்தர்களால் சொல்லப்படும்சாஸ்திரி. பிரமாணம் காட்டப்படும் நூல் பாகவதம் தேவிபாகவதம் என்னும் வைஷ்ணவ நூல்கள். சரியென்று ஒத்துக்கொண்டவர்கள் சமயவாதிகள். சீலை வேஷ்டி சித்தாடை தக்ஷிணை பெற்றவர்கள் பாப்பாரப் பெண்கள்- வயிறுநிறையவிருந்துண்டவர்கள் பாப்பார்கள்- இவையெல்லாம் நம் பண்டிதன்படித்திருக்கும்படிப்பில் அவன் கண்டுபிடிக்க அவன் புத்தி விலாசப்படவில்லையா? வாசகர்களான நீங்கள் அவர்களைக்கண்டால் அவர்களுக்குச் சொல்லுங்கள்.

மேற்சொன்ன நான்குபாஷியங்களுக்கும் அன்னியமாய் சோமநாத ஆராத்திய பாஷியமென்று ஒன்றிருக்கிறது- வியாசர் பிர்மநிச்சயத்திற்கு சூத்திரமெடுக்கும் பரிபாகியல்லவென்றும் பிர்மசூத்திரத்தால்கடவுள் நிச்சயம் ஏற்படாதென்றும் கூறும். பொருத்தன்மைக்காட்டி பின் சமயவாதிகளுடையசட்டைப்பைக்குள்புகுந்துவிடும்-பார்ப்பான் பிர்மத்தின் முகத்திலிருந்து பிறந்து கர்மத்தால் பிராமணனுகிறான் என்று வேதபார்ப்பார்சொல்லுகிறார்கள்- பரமசிவத்தின் பஞ்சமுகங்களாகிய ஈசான தற்புருஷ அகோர வாமதேவ ஸத்யோஜாதாதி ஐந்துமுகங்களின்று வெளிவந்தவரெனவும் வரும்பொழுதே பிராமணரென்றும் ஆகமப் பார்ப்பார் சொல்லுகின்றார்கள்- சூத்திரனுக்கு வேதம் படிக்க அதிகாரமில்லையென்கிறார்கள்- வேதப் பாப்பார்கள் சூத்திரன் சிவதீக்ஷை பெற்றிருந்தாலும் ஆத்மார்த்த பூஜை செய்ய அதிகாரமே ஒழிய பரார்த்த பூசை செய்ய ஆருக்கும் அதிகாரமில்லை- இந்த இரண்டு பூஜையும் சதாசிவமூர்த்தி இவர்களுக்குத் தனியாகக் கொடுத்தது என்று ஆகம பாப்பார்கள் சொல்லுகிறார்கள்- இவை ஆட்சேபிக்கப்பட பூமியும் பொருளும் படிப்புமுடையவர்கள் சற்சூத்திரர்கள் என்று சைவர்களைத் திருப்தி செய்து வைத்திருக்கிறார்கள். சற்சூத்திரன் என்றால் சுத்தமான முட்டாள், நல்ல வேலைக்காரன், அசல் தாசிமகன், உத்தமமான ஒழுக்கமற்றவன், நல்ல ஆச்சாரமில்லாதவன் என்பது அர்த்தம்- இது "குடி அரசின்" அர்த்தமல்ல-சுவாமி வேதாசலம் வேளாளர்களைப்பற்றி எழுதின புஸ்தகத்திலுள்ள அர்த்தமே இது.

வைஷ்ணவனின் கொடுமைக்கு சைவன் பரிதாபப்படுவதும் சைவனுடைய இரக்கமற்ற தன்மையைக்கண்டு வைஷ்ணவன் பச்சாதாபப்படுவதும் இந்த இரண்டுபேர்களும் மாயாவாதமென்று அத்வைத மதத்தைக்கண்டித்து ஸ்மிருதிகளை வேறுவகையில் தலையில் தூக்கி ஆடுவதும் ஆதனுல் ஜனசமூகங்கள் அடிமைப்படுவதும்இந்தமதங்களையெல்லாம் கண்டித்து தான் பெரியவன் என அபிநயித்து கர்மத்தைமட்டும் சர்கார் விடச்சொல்லவேயில்லை என்று சோறும் தக்ஷணையும் கிடைக்குமிடமெல்லாம் கூடிக்கொண்டு எதற்கும் தத்துவார்த்தம் கற்பித்தும் தப்பித்துக்கொள்ள எதற்கும் தத்துவ அர்த்த மிருப்பதாகச்சொல்லி எல்லாமதங்களையும் கூட்டிப்பிடித்து எல்லாமதங்களுக்கும் ஸ்மிருதிகளை ஆசனப்பலகையாகப் போட்டு அதில் எல்லாபண்டிதர்களையுமிருத்தி ஏமாற்றி வேதப்பார்ப்பான் தன் வயற்றை நிரப்புவதையும் அப்பொழுது அவனேடு சேர்ந்துகொண்டும் எல்லாமதப்பாபானையும் நாங்கள் குற்றம் சொல்லுகையில் எல்லாரும்சேர்ந்து தலையசைக்கிறார்கள். தொடரும்.

இராமநாதபுரம் ஜில்லாபோர்டு தலைவருக்கு வாழ்த்து.

29-10.28 மாலை 8 மணிக்கு முத்தராமலிங்கபுரம் ஞானானந்த வாசகசாலையில் புதிதாய் நியமிக்கப்பெற்ற இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவரவர்களுக்கு வாழ்த்துதல் கூற ம-ரெட்டையப்பட்டி மேடிவ் டாக்டர் திரு. அழகர்சாமி ரெட்டியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் கூடியது. "சுயமரியாதை" "மதம்" "தீண்டாமை" "மூடபழக்க வழக்கங்கள்" என்பதுபற்றி சொற்பொழிவுகள் நிகழ்ந்திய பின்னா சபையோர்களால் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டன.

1. நமது ஜில்லா போர்டு பிரசிடெண்டாக தன்னலங்கருதாப் பெரியாராகிய பட்டிவீரன்பட்டி திரு. சௌந்திரபாண்டியநாடார் அவர்களை நியமித்ததற்காக காருண்யகவர்ன்

இராசீபுரம் யூனியனும் தாழ்த்தப்பட்டவர்களும்-

இதற்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஸ்தானம் கொடுப்பதாக ராமக்கல் தாலூகாபோர்டார் ஏற்கனவே வாக்களித்திருந்தும் இவ்வாண்டிற்கு சென்ற மாதத்தில் ஷை யூனியனுக்கு இரண்டு மகமதியர்களையும் எலக்ஷனில் தோல்வியடைந்த தேவாங்க செட்டியாரையும் தாலூகாபோர்டு நியமனம் செய்திருப்பது விந்தையிலும் விந்தை. கனம் மந்திரியார் அவர்கள் ஷை நியமன ஸ்தானங்களை ரத்துசெய்துதாழ்த்தப்பட்டவர்களுக்கு ஷை நியமன ஸ்தானங்களை கொடுத்து முன்னேற்றம் செய்வார்களென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நிருபர்.

மெண்டாரவர்களுக்கும் திரு. நாடார் அவர்களுக்கும் இக்கூட்டத்தார் தமது மனப்பூர்வமான மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள் காரியதரிசி.

நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்க மெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! மூப்பு சேர்த்த மருந்துகள்.

தாதுபுஷ்டியில் மன்மதனுக் கொப்பாவர்.
பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.
நீங்கள் என்றுமழியாத இளமைப் பருவத்தை
அடைய வேண்டுமானுல்

பழனி சி. எம். சாமி மகா வீரிய

தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்.

தாதுபுஷ்டியில் இதற்கு நிகரானது ஒன்றுமேயில்லை. துர்க் கிருத்தியங்களால் இழந்த ஆண்மைத் தனத்தை வெகு சீக்கிரத்தில் மீட்டு தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், நபுஞ்சகம் முதலிய வியாதிகளை நீக்கி சந்தான விர்த்தியை உண்டாக்கும். ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

48 நாள் பஸ்பம் ரூ, 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை, பலக்குறைவு முதலிய நீங்கி அபார தாதுபுஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையை எழுதமுடியாது. இன்னும் மேற்படி தங்க பஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி, எம், வரதராஜப் பெருமாள்சாமி, கவிராயர், பொள்ளாச்சி.

குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேகபுஷ்டியையும் தரும். சகல மேகமும் ஐயரோகமும் நீங்கும். தனுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி:—நான் சிங்கப்பூரில் நீரழிவினுல் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குரு அப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று. இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்த் தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குரு அப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பக் கோருகிறேன். கா. முகமது அப்துல்காதர், காரைக்கால். 21-12-26

குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ 16.

நற்சாட்சி:—தங்கள் குருதாளக பஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி, இளைப்பு இவைகள் குணமாயிருக்கின்றது. ஆர். கந்தையா, நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ, சிலோன். 18-9-25.

எல்லா மருந்துகளுககும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,
C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை,
பழனி S. I.

நான்காம் பதிப்பு! நான்காம் பதிப்பு!

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம். நேர்த்தியான அச்சு
நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.



இந்த ஏரோப்ளேன் டிரேட் மார்க்பார்த்து வாங்குங்கள். இந்த டிரேட் மார்க் இருந்தால்தான் உண்மைப் புஸ்தகம்.

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1 துறவிகளின் கதி என்ன
2 இல்வாழ்க்கை ஏன் சிறந்தது.
3 இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி.
4 இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும் பாடு.
5 பெண்ணின் பெருமை. பெண் கல்வி.
6 நாணம் எப்படி உண்டாயிற்று?
7 உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8 நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9 நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன
10 இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்.
11 ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன, உண்மையான கலியாணம் எது.
12 காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13 இல்லறத்தில் எப்படி வெற்றியடைவது?
14 மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15 கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16 தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டு கொள்வது?
17 ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18 அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19 பல ஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20 சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21 ருது வாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22 பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்குக் காரணம். இதைப் போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23 மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24 கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று எப்படி அறிந்து கொள்வது?
25 கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள்.
26 கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக் கூடிய வியாதிகள்.
27 அவைகளைப் போக்கடிக்கும் உபாயங்கள்.
28 முதல் மாதத்திலிருந்து கடைசி மாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29 ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.
30 புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது. இதைப் போக்கிக் கொள்வதெப்படி.

31 அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத் தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்கமுடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுக் கொலை அநியாயம்.

32 ஒருவன் எத்தனை மாதரை மணம்புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக்காப்பாற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்கவேண்டுமானால் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்.

33 தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா. தாசிகள் வீட்டுபோகும்நண்பர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சிலவார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

விலை ரூபாய் 2-0 0.

ஒரே சமயத்தில் இரண்டு காபிகளுக்கு எழுதினால் உள்நாட்டுக்கு தபால் செலவு இனாம்.

வாஸன் புஸ்தகசாலை,

24½, தங்கசாலைத் தெரு, தபாற் பெட்டி நெ. 119 ஜி.டி. மதராஸ்.

சந்தாதாரர்களுக்கு

அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறுவருஷத்திற்கு சந்தா அனுப்பும்போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்

"குடி அரசு" ஈரோடு.

'விஸ்வநேசன்'

விஸ்வகுல முன்னேற்றத்திற்கு

உழைத்துவரும் ஒரு

வாரப்பத்திரிகை

தற்கால நிலைமைக்கேற்ற வண்ணம் பொதுவான சீர்திருத்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது.

ஆசிரியர் திரு. கா. சுப்பண்ணாச்சாரி

இதன் வருட சந்தா ரூ 3—0—0

வெளிநாட்டுக்கு ரூ 4—0—0

விலாசம்:— மானேஜர்,

விஸ்வநேசன் காரியாலயம், ஈரோடு.

பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. திரவியங்கள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்,

திரௌபதை அம்மன் கோவில் வீதி,

புதுச்சேரி.

கணித சோதிடம்.

பாரித கணிதப்படி கணிதஞ் செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதிஅனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதிஅனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்குப்புருஷனும் புருஷனுக்குப்பெண்ணும் இவரேயென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம அருமையான பூர்வீகசோதிட நூற்களும்பலவுள்ளதால் நாங்கள் எழுதிஅனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக சவலாவது கடிதம எழுதும் நேரத்தையாவதுதெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,

முதலியார்பேட்டை, புதுச்சேரி.

64 — பக்கம் — 64

ஆனந்த விகடன்

இதுசமயம் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதை சந்தா நேயர்களுக்கு வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன, தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆனந்த விகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகடன்"விலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு

தபால் கூலியுள்பட 1...0...0

வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ 1...4...0

மாதிரி காபி இனும்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,

244. தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்". டெலிபோன் நெ. 3311.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரைகளை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி., மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு 3½x 2½ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 க்கு கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

காளடியன் வாட்ச் பீபிள், ஜி. டி. மதராஸ்

ஸ்ரீமதி நாகம்மாள்அவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.